www.tamilarangam.net

# களத்தில்



தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்த வரையில் சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட கடும்போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகின்றோம். அவரது ஆறாண்டு கால அரசியல் வரலாறும், தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இராணுவப் பொருளாதாரக் கொடுமைகளுக்கு ஆளாக்கி வரும் அவரது அணுகுமுறையும், சமீபத்திய அவரது போர்த் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப் பாட்டிற்குத் தள்ளியது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

28.12.2000 நாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்நாள் (224)

## புத்தாண்டு வாழ்த்துக்கள் 2001

அஞ்சுதலும் கெஞ்சுதலும் இன்றி நெஞ்சு நிமிர்த்தி நிலவுக்குக் கைநீட்டு, விலங்கின்றி, வீர விளைநிலத்தில் விதையானோர் நினைவேற்றி பாடுதலும் ஆடுதலும் பரவசமாய் காலை புலர்வதுவும் நாளை கூடுதல்கூடும்.

புதிய ஆண்டில், புதிய நூற்றாண்டில், வாழ்வின் துயரும்– அடிமையெனும் வரலாற்றுப் பெரும்பிணியும் நீக்கமுற உழைப்பதுவே புத்தாண்டின் புனிதப் பணி.

எம்மினிய வாசகர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு இனிய புலர்வின் வாசலில் நின்றபடி....

# சமாதான சூழ்நிலையை நாடும் விடுதலைப் புலிகள் போரின் தீச்சுவாலையை அவாவும் சிங்களம்

**கடந்த சில வாரங்களாக, விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே, ஒரு கடுமையான அறிக்கைப் போரே நடந்துவருகின்றது. சமாதானப் பேச்சுவார்த் தைக்கு முன்னோடியாக, போர் தணிந்த சுமூக சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்க விடுதலைப் புலிகள் கடுமையாக முயற்சித்துவருகின்றனர். அதேவேளை, சிறீலங்கா அரசோ, போர்ச் சூழலை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள கடுமையாகப் போராடிவரு கின்றது. அதற்காக, நகைப்புக்கிடமான, அர்த்தமற்ற காரணங்களைத் தெரிவித்து வருகின்றது.**

தமிழீழத் தேசியத் தலைவர், மாவீரர் நாள் உரையில் விடுத்த சமாதான அறைகூவலுக்கு, காலங்கடத்தி, இரண்டு வாரங்களின் பின் சிறீலங்கா அரசு வழங்கிய பதில், சமாதான முயற்சிக்கு விரோதமானது. போர் நெருக்கடி தணிக்கப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கையை, சந்திரிகா அரசு நிராகரித்தது. சிங்கள பௌத்த பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த, போர் தீவிரமாய் முன்னெடுத்துச் செல்லப்படும் என, அறிவித்தது. சமாதானத் துக்கான போர் என்ற தனது நாசகாரத் திட்டத்தை கைவிட மறுத்தது.

இது குறித்து, விடுதலைப் புலிகள் தமது ஆழ்ந்த கவலையையும், அதிருப்தியையும் வெளி யிட்டனர். சிறீலங்கா அரசின், அர்த்தமற்ற பிடிவாதப் போக்கை கைவிட்டு, சுமூகச்சூழல் ஒன்றை ஏற்படுத்த முன்வரவேண்டும் எனவும் தமது டிசம்பர் 16ஆம் திகதி அறிக்கையூடாக வெளியிட்டனர்.

பின்னர், டிசம்பர் 21ஆம் திகதி, விடுதலைப் புலிகள், தாமாகவே முன்வந்து, போர்நிறுத்த அறி வித்தல் ஒன்றை விடுத்தனர். நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக, ஒரு மாதகால ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் ஒன்றை விடுதலைப் புலிகள் அறிவித்தனர். நத்தார், புதுவருடம், பொங்கல், ரம்ளான் போன்ற புனித நாட்களை உள்ளடக்கிய இக்கொண்டாட்ட காலத்தில், போரைத் தவிர்ப் பதென விடுதலைப் புலிகள் தீர்மானித்து அறிவித்தனர். போர்நிறுத்த அறிவித்தலை, ஒரு நல் லெண்ண வெளிப்பாடாகக் கருதவேண்டும் எனவும், போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையையும் சமாதான சூழ்நிலையையும் உருவாக்கும் நோக்குடனேயே இதனை மேற் கொண்டிருக்கின்றோம் என, விடுதலைப் புலிகள் அறிவித்தனர். இந்த நல்லெண்ண முயற் சியை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொண்டு, அதற்குச் சாதகமாக நடந்துகொண்டால், ஒரு நிலை யான போர் நிறுத்தத்திற்கும் நேரடிப் பேச்சுக்கும் வழிகோலும் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

ஆனால், சிறீலங்கா அரசோ, டிசம்பர் 23ஆம் திகதி, மாலை, விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலை நிராகரித்து அறிக்கை வெளியிட்டது. இத்தகைய நல்லெண்ண முயற்சி கள் அவசியமற்றது என, சிறீலங்கா அரசு தெரிவிக்கின்றது. போரைத் தொடர்ந்து நடத்தியபடி, பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என, தனது அறிக்கையில் அது தெரிவித்திருக்கின்றது. தனது படையினர், போரைத் தொடர்ந்து நடத்துவார்கள் என்பதையும் அது தனது அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

போரும் சமாதானமும் ஒத்திசைவாகச் செல்லமுடியும் என நம்புவதுடன், போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களை ஒரே சமயத்தில் நிகழ்த்தலாமென சந்திரிகா அரசின் நினைப்பைக் கண்டித்து, விடுதலைப் புலிகள் டிசம்பர் 25ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். நடைபெற முடியாத காரியத்தில், அபத்தமான தர்க்கீகத்தில் சிறீலங்கா அரசு நம்பிக்கொண்டிருப்பதுபோல் தெரிகின்றது என, விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர்.

எனினும், தம்மால் அறிவிக்கப்பட்ட ஒரு மாதகாலப் பகுதியில், தமது படையணிகள் போர்நிறுத்த நடைமுறையைக் கடைப்பிடிப்பர் என விடுதலைப் புலிகள் அறிவித்தனர். எனினும், தமது நிலைகள் மீது எதிரி தாக்குதல் நடத்தினால், தற்காப்புப் போரில் ஈடுபடுவோம் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விட்டுக்கொடாத போக்கை அரசாங்கம் கடைப்பிடித்தபோதும், சமாதான முயற்சிக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க நாம் தீர்மானித்திருக்கின்றோம் எனத் தெரிவிக்கும் விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரசு தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து, போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க முன்வருமென எதிர்பார்ப்பதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்கா அரசு தனது இராணுவவாதக் கடும்போக்கைக் கைவிட்டு, சமாதான வழிமுறையில், தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிக்குமாறு, சிறீலங்கா மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என, சர்வதேச உலகத்திற்கு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அடித்த பந்து, தற்போது சிங்களத்தின் பக்கம் மாத்திரமின்றி, சர்வதேச உலகத்தின் பக்கமும் சென்றிருக்கின்றது. சாதகமாகப் பதில் தரவேண்டியவர்கள், சிங்களம் மாத்திரமின்றி, இந்த உலகமும்தான். ●



**"நோர்வேக்காரர் ஒண்டு சொல்லிச்சினம், தாங்கள் ஒரு திட்டம் வைத்திருக்கிறம் எண்டு. என்ன திட்டம் என்று சொன்னால், பரஸ்பரம் விட்டுக்கொடுப்பது. நல்லெண்ண முயற்சிகளைச் செய்து விடுகிறது. அவை ஒண்டைச் செய்தால் நாங்கள் ஒண்டைச் செய்யிறது. அப்பிடி, இந்தப் போர் நெருக்கடி களை, பொருளாதார நெருக்குவாரங் களை படிப்படியாகத் தணித்து, ஒரு இயல்பு நிலையை, ஒரு நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கவேண்டும். அதுக்கப்புறம் பேச்சுக்களை நடத் தலாம்"**

லண்டன் மாநகரில், 02.12.2000 அன்று நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையின் இறுதிப் பகுதி உள்ளே.

'இத் தொலைக்காட்சி நிகழ்ச்சியானது விடுதலைப் புலிகளுக்கு மாசு கற்பிக்கும் நோக்கத்துடனேயே தயாரிக்கப்பட்டதாகும். எவ்வளவு தூரம் விடுதலைப் புலிகளைப் பாதித்திருக்கும் என்பது சந்தேகமே..'

அவுஸ்திரேலியத் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிக்கு
**சிங்களக் கல்விமானின் மனந்திறந்த மறுப்பு**
→ 5

'ஒருசில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டிலிருந்து படைவிலக்கலைப் பற்றிச் சிந்தித்த அரசாங்கம் இப்போது ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி மேலும் நில ஆக்கிரமிப்பை நடாத்த ஆசைகொண்டுள்ளது.'

**பேரினவாதிகள் கைகோர்க்கின்றனர் சிங்கள தேசத்தின் புதிய அரசியல் சூழல்**
→ 6

'தமிழர் தாயகமான தமிழ்ழத்தின் பெரும் பகுதியை அழித்தும், இராணுவ வேலிகளிட்டும் தமிழரின் தன்மான, வீர உணர்வுக்கு அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கும் வேளையில் இழந்த தாயகத்தை மீட்கும் விடுதலைப் போராகவே வன்னிப் போரினைக் கரிகாலன் நெறிப்படுத்தினார்.'

**ஓயாத அலைகளும் தமிழீழம் நோக்கிய நகர்வுகளும்**
→ 7

**ஓயாத அலைகளில் ஓய்ந்த ஒரு சுடர்**
மேஜர் அகிலா நினைவாக
→ 10

'தமிழர்களின் அழியாத வரலாறாகவே எழுந்துள்ள தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களையும், ஓயாத அலைகள்-3ஐயும் வாழ்த்த, வியந்துகூற வார்த்தைகளின்றி எவரும் தடுமாறுவது இயல்பே. எனினும், மனித உணர்வுகளை வார்த்தைகளில் வடிப்பது எளிதல்ல'

**ஓயாத அலைகள் 3ம் உறவுகளின் உணர்வுகளும்**
தமிழீழ மக்களின் பதிவாகிய குரல்கள்
→ 11

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அம்பலமாகும் சந்திரிகா அரசின் பொய்மைத்தோற்றம்.

களமுனையில் போர் நடவடிக்கைகளின் தீவிரம் மந்தமடைந்திருக்க, இராஜதந்திரத் தளத்தில், போர் தீவிரம் பெற்றிருக்கின்றது. அது உண்மைக்கும் பொய்மைக்குமான போர்.

விடுதலைப் புலிகளின் காத்திரமான ஒவ்வொரு நகர்வும், சந்திரிகா அரசின் பொய்மைத் தோற்றத்தை உலகம் அறிந்துகொள்ளும் வண்ணம் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

போரை நிறுத்த விரும்புபவர்கள் யார்? போரை நடத்த விரும்புபவர்கள் யார்? சமாதானத்தை விரும்புபவர்கள் யார்? சமாதானத்துக்குத் தடையாக நிற்பவர்கள் யார்? என்ற கேள்விகளுக்கெல்லாம், கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் பரஸ்பரம் வெளியிட்ட அறிக்கைகள் நல்ல விடையாக வெளிப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில், இன அழிப்புப்போரை நடத்திக்கொண்டு, சமாதானம் பற்றிப் பேசிவந்த சந்திரிகா அரசு அம்பலப்பட்டிருக்கின்றது.

பேச்சுவார்த்தைக்கு முன்னதாக, போர் நெருக்கடியைத் தணித்து சுமுக சூழ்நிலையை ஏற்படுத்தல் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை, சிறீலங்கா அரசு நிராகரித்திருந்தது. போர் தணிக்கப்படமாட்டாது யுத்தம் தொடரும் என அது அறிவித்தது. அதன்பின்னராக, நத்தார், புத்தாண்டு, பொங்கல், ரம்ழான் போன்ற புனித நாட்களை முன்னிட்டு, இப்புனித காலப்பகுதியில், ஒரு மாதகால போர்நிறுத்தத்தை மேற்கொள்வதென விடுதலைப் புலிகள் விடுத்த அறிவித்தலை சிறீலங்கா அரசு நிராகரித்திருக்கின்றது. இத்தகைய நல்லெண்ண சமிக்ஞைகள் எதுவும் தேவையில்லை என்று அறிவித்திருக்கின்றது சிறீலங்கா அரசு. போரை தற்போதைக்கு நிறுத்தும் எண்ணம் தமக்கில்லை எனவும், அது தீவிரப்படுத்தப்படும் எனவும் சிறீலங்கா அரசு அறிவித்திருக்கின்றது.

தமிழீழ மக்களின் பிரச்சினை மீது இன்று, சர்வதேசத்தின் பார்வை பட்டிருக்கின்றது. தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையின் ஆழஅகலத்தை இந்த உலகம் நுணுகி ஆராயத் தலைப்பட்டிருக்கின்றது. இதுநாள் வரை, சந்திரிகா அரசின், சமாதானத்துக்கான போர் என்ற புதுவிதமான அணுகுமுறையில் குழம்பிப்போய் இருந்த உலகம் இன்று, தெளிவுநிலையை எட்டுகின்றது.

போர் நிறுத்தப்படவேண்டும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும் என, சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது.

இதுநாள் வரை உலகநாடுகளை எட்டத்தில் வைத்து ஏமாற்றி, தனது நலன்களுக்காக அவற்றின் உதவியை பெற்றுவந்த சந்திரிகா அரசும், சிங்களப் பேரினவாதமும், சர்வதேச சமூகம் இப்பிரச்சினையில் சிரத்தை கொள்வதையிட்டு, கலக்கமும் கொதிப்பும் அடைந்திருக்கின்றது.

தமிழ்மக்களுக்கெதிரான யுத்தத்தை நடத்த சந்திரிகா அரசு, உலக நாடுகளிடம் கையேந்தி நின்று, பொருளாதார உதவியும் ஆயுத உதவியும் பெற்றுவரும் போதெல்லாம், ஆசி வழங்கிய சிங்கள பௌத்த பேரினவாதம், அந்நாடுகள், இனப்பிரச்சினையில் தலையிடும்போது, எமது உள்நாட்டுப் பிரச்சினையில் அன்னிய நாடுகள் தலையிடத் தேவையில்லை, அதற்கான உரிமைகள் எவையும் அவற்றிற்குக் கிடையாது எனக் கூக்குரல் இடுகின்றது.

விடுதலைப் புலிகளை, பிரித்தானியாவில் தடைசெய்யுமாறு கோரி, அடிக்கடி பிரித்தானியாவிற்கு காவடி எடுத்துவரும் கதிர்காமர், பிரித்தானிய வெளிவிவகார துணை அமைச்சர் பீற்றர் கெயின், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படைகளை உலகம் அங்கீகரிக்கவேண்டும் எனத் தெரிவித்த கருத்துக்காக, எம்பிக்குதித்து அறிக்கை வெளியிட்டார்.

நட்புநாடுகளைச் சேர்ந்த நண்பர்கள், இப்படியான கருத்துக்களை வெளியிட்டு பிராந்தியத்தில் குழப்பத்தை உண்டுபண்ணக் கூடாது எனத் தெரிவித்திருக்கும் கதிர்காமர், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு இத்தகைய கருத்துக்கள் இடைஞ்சல் விளைவிக்கும் எனவும் தெரிவிக்கின்றார்.

சர்வதேச சமூகம், போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை, சர்வதேச சமூகம் வரவேற்றிருந்தது. பிரித்தானியா, நோர்வே, அமெரிக்கா உட்பட பல நாடுகள் விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்திருந்தன. அதேபோன்று, விடுதலைப் புலிகளின் இந்தப் போர் நிறுத்த அறிவித்தலுக்கு, சிறீலங்கா அரசும், உகந்த சாதகமான பதிலை அழிக்கவேண்டும் என்ற தமது விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் அவை வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால், சந்திரிகா அரசோ, தனது உண்மையான நிலைப்பாட்டை அறிவித்தது. பல குரல்களில் பேசியும் பல முகங்களில் தோற்றமளித்தும் வந்த சந்திரிகா அரசு, இறுதியாக தனது உண்மை முகத்தை வெளிக்காட்டியுள்ளது. உண்மைக் குரலில் பேசியது. போர் நிறுத்தம் கிடையாது என அது அறிவித்தது. சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞைகள் எதுவும் தேவையில்லை என அது நிராகரித்திருக்கின்றது.

தனது இந்த நிலைப்பாட்டை சர்வதேச சமூகம், எதிர்க்கும் என்பதைத் தெரிந்துகொண்டும், தனது பேரினவாத நிலைப்பாட்டுடன், தன்னைச் சந்திரிகா அரசு இனங்காட்டியிருக்கின்றது.

சர்வதேசத்தில், பொய்யும் புனைகதையுமாக தாம் மேற்கொண்ட முயற்சிகள் தோற்றுப்போனாலும் கவலையில்லை, யுத்தத்தில் வெல்லவேண்டும் என, சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையின் குரலில் சந்திரிகா அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது.

சர்வதேச சமூகத்திடம், தமது நிலைப்பாடு, தோற்றுப்போகும் நிலையில் உள்ளது என்பதை உணர்ந்தே, ரத்வத்தை இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

சர்வதேசத்தில் விடுதலைப் புலிகளிடம் பிரச்சாரப் போரில் தோற்றாலும் கவலையில்லை, களமுனையில், உண்மையான போரில் நாம் விடுதலைப் புலிகளிடம் தோற்காமல் இருக்க வேண்டும் என்கிறார் ரத்வத்தை. முடிகிற காரியமா..? இதுவும் முடிகிற காரியமாகத் தெரியவில்லை என்கின்றார் பி.பி.சி.யின் கொழும்பு முகவர், பிரான்சிஸ் காரிசன். ■

# மிருசுவில் வடக்கில் மற்றுமொரு மனிதப்புதைகுழி

## கழுத்தறுத்துப் புதைக்கப்பட்ட தமிழர்கள்

சிங்கள அரச படைகளின் மற்றுமொரு பயங்கரவாதம் அரங்கேறியிருக்கின்றது. தென்தமிழீழத்தில் சிங்களக் கடற்படையினர் தமிழ் மக்களைக் கொன்றுவருவாதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்த அடுத்த சில நாட்களில், தென்மராட்சியில் சிங்களப் படையினர் 8 தமிழர்களைக் கொன்று புதைத்த கொடுமை நிகழ்ந்திருக்கின்றது. தென்மராட்சியின் மிருசுவில் வடக்குப் பகுதியானது தற்சமயம் போர் நடக்கும் பகுதிக்கு அருகே இக்கிராமம் காணப்படுவதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இவ்வாறு இருந்தவர்களில் ஒன்பது பேர் கடந்த 19.12.2000 அன்று தமது வீடுகள் அமைந்திருந்த மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத்திட்டதிற்கு, தமது வீடுகளைப் பார்த்து வரச் சென்றிருந்தனர். அவ்வாறு சென்றவர்களில் 8பேர் கடந்த 25.12.2000 அன்று சுமார் 4அடி அகலமும் 8அடி நீள மும் கொண்ட புதை குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். மிருசுவில் வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி நாவலர்மடம் பகுதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட எட்டுப்பேரே சிங்களப் படையால் கோரமாக மிருகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட அனைவருமே ஆண்களாவர்.

இவர்களுடன் சென்ற பொன்னுத்துரை மகேஸ்வரன் என்ற இளைஞர் சிங்களப் படையின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் மயிரிழையில் உயிர் தப்பி வந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவரின் மூலமே இச்சம்பவம் வெளிஉலகை எட்டியுள்ளது. இதன் பின்னரே மிருசுவில் வடக்கின் தென்னங்காணி ஒன்றில் வைத்தே இவர்கள் சிங்களப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மிகவும் பழுதடைந்த உருக்குலைந்த சடலங்களிற் பல கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் காணப்பட்டன. சில சடலங்கள் கைகள் வெட்டப்பட்டும் இருந்தன. மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்றான ஐந்து வயதுச் சிறுவனின் சடலம் கால் முறிக்கப்பட்டுத் தொங்கியது. இரத்த வெறிபிடித்த சந்திரிகாவின் சிங்களப் படைகள் 5வயதுச் சிறுவனை கால்களை முறித்தே கொன்றுள்ளனர்.

சந்திரிகா படைகள் கொன்று புதைத்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு: எஸ்.வில்வராஜா (வயது-40), அவரது மகனான வில்வராஜா பிரதீபன்(வயது-15), மற்றொரு மகனான வில்வராஜா பிரசாந்த்(வயது-5), தேவகுலசிங்கம்(வயது-21), ஞானபாஸ்கரன்(வயது-19), நடேசு ஜெயச்சந்திரன்(வயது-21), கதிரன் ஞானச்சந்திரன்(வயது-35), அவரது மகனான ஞானச்சந்திரன் சாந்தன்(வயது-15) ஆகியோராவர்.

படுகொலைகள் இடம் பெற்றமையானது மூடிமறைக்க முடியாமல் போய்விட்டமையால் வேறு வழியின்றி விசாரணைகளை தொடக்கியுள்ளது .அரசு இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பது சந்தேகமே. இந்த கோரச்செயலின் ஒரேயொரு சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் உயிருக்கும் சந்திரிகா படைகள் குறிவைக்குமா? இதனையும் சர்வதேசம் தொடர்ந்து பார்வையாளனாக இருந்து சந்திரிகாவின் மக்கள் விரோதச் செயல்களுக்கு துணைபோகுமா என்பதே தமிழீழ மக்களின் கவலையாகும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லண்டன் மாநகரில் மாவீரர் நாள் விழாவில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரை

**தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையை விரிவாகவும், சுவைததும்பவும் விளக்கி, அவர் ஆற்றிய நீண்ட உரையின் இறுதிப் பகுதியை இங்கு தருகின்றோம்.**

*சென்ற இதழ் தொடர்ச்சி..*

யாழ்ப்பாணம் விடுதலைப் புலியளிட்டை விழப்போகுது. தமிழீழம் வரப்போகுது எண்டு அம்மா அபாயச்சங்கை எடுத்து ஊதுறார். இதுதான் உண்மையில நடந்தது.

அபாயச்சங்கை ஊதி, உலகநாடுகளின்ர உதவியைக் கேட்கிறார். கதிர்காமர் இந்தியாவுக்கு ஓடுறார். கதிர்காமரை விட்டது ஏன் எண்டு சொன்னால், புலியள் யாழ்ப்பாணத்தைப் பிடிச்சு, தமிழீழத்தை அமைக்கப்போகினம், நீ என்ன பார்த்துக்கொண்டிருக்கிறாய்? உன்னட்டைத்தான் முதலில வருவம். நீ கையைக் குடு. இது உண்மையில நடந்தது. அப்ப இந்தியாக்காரர் யோசிக்கினம். அவையளுக்குத் தெரியும் புலியள் பற்றி. முன்னர் அனுபவப்பட்டவை அல்லவா. முன்னர் ஜே.ஆர்.க்கு கைகொடுக்கப் போய், கிட்டத்தட்ட 1500 இந்தியச் சிப்பாய்களை இழந்து பின்னர் அவமானப்பட்டு வெளியேறிய நிலைமை ஏற்பட்டது. முன்னர் எண்டால் புலியள் ஏ.கே. உடன் திரிந்தார்கள். இப்பொழுதோ ஆட்லறியோட நிற்கிறார்கள். உதுக்குள்ள இறங்கினாப் பெரிய பிரச்சினை வரும். அப்ப இந்தியா என்ன செய்யுது..? நாங்கள் உதுக்குள்ள வரவில்லை. ஆனால் ஒண்டு செய்யிறம். சிக்குப்பட்டு நிற்கிற உங்கட முப்பதினாயிரம் துரப்புக்களை, மனிதாபிமான அடைப்படையில புலியளோட கதைச்சு மீட்டுத் தாறம் எண்டு சொல்லிச்சுது. அம்மா யோசிச்சது என்னண்டு சொன்னால், இந்திய இராணுவம் இறங்கி, புலியளோட மோதி, பிறகு இந்திய இராணுவமும் சிங்கள இராணுவமும் சேர்ந்து புலியளை அடிச்சு விரட்டலாம் எண்டுதான் எதிர்பார்த்தவா. ஆனால் அது சரிவரேல்ல.

அம்மாவுக்கு யாழ்ப்பாணத்தை விட்டுட்டுப் போக விருப்பமில்லை. எண்டாலும் அவ்வளவு துருப்புக்களும் அழிஞ்சுபோய் சிங்கள இராணுவம் முழுக்கச் சிதைஞ்சுபோகும் என்று நினைத்தா. அப்ப அம்மா முதலில ஓம் என்று சொல்லுறா. இதுதான் உண்மையில நடந்த விசயம். அப்ப இந்திய அரசு எங்களைத் தொடர்புகொண்டது. எங்களைத் தடை செய்தாலும் தேவை ஏற்பட்டால் எங்களைத் தொடர்பு கொள்ளுவினம். நோர்வே அரசாங்கத்தைப் பிடிச்சு, எங்களைத் தொடர்பு கொண்டிச்சினம். என்னை, பிரபாகரனிட்டைச் சொல்லட்டாம், இராணுவத்துக்கு அடிச்சுப்போட வேண்டாம், நாங்கள் வந்து அவையளைப் பாதுகாப்பாக எடுத்துக்கொண்டுபோறம் என்று. அவையளை வந்து கொண்டுபோற நேரத்தில, நீங்கள் போர் நிறுத்தம் செய்யவேணும் எண்டு கேட்டிச்சினம். அத்தோட, 'எங்கட படையை அடிச்சுப்போடக்கூடாது எண்டும் கேட்டிச்சினம். நான் இதை தலைவரிட்டை சொன்னன்.

அப்ப தலைவர் மூன்று விசயங்களைச் சொன்னார்.

முதலாவது என்னவென்றால், இந்திய இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் கால் வைக்கக்கூடாது.

இரண்டாவது, கடலில நின்று, கடலால இராணுவத்தை எடுத்துக்கொண்டுபோக வேணும்.

மூன்றாவது,' இராணுவம் வெளியேறேக்க, ஆயுதங்கள் ஒன்றையும் கொண்டுபோக முடியாது, அவற்றைப் போட்டுவிட்டுத்தான் வெளியேற வேண்டும்.

இதை நோர்வே, இந்தியாவுக்குத் தெரிவிச்சுது. அதுக்கு ஒத்துக்கொண்டிச்சினம்.

அம்மா பார்த்தா, இது ஒண்டும் சரிவராது. இந்தியாட்ட போனால், முழு ஆயுதங்களையும் புலியளிட்டைக் கொடுத்திட்டு, பெரிய அவமானத்தோட வெளியேறவேண்டிவரும். இதைவிடக்கூடாது. அப்ப அம்மா என்ன செய்தா எண்டால், அமெரிக்காவிட்ட போய் விழுந்தா. அமெரிக்கா என்னவெண்டால், இதில தான் நேரடியாகத் தலையிடப் பயம். அவையளுக்கும் புலியளைப் பற்றித் தெரியும். அமெரிக்கா என்றும் பார்க்கமாட்டாங்கள், ரஸ்சியா என்றும் பார்க்கமாட்டாங்கள் போட்டுத் தள்ளுவாங்கள் எண்டு.

அப்ப அமெரிக்கா என்ன செய்யுது எண்டால், தனக்காக தலையிடுகிற ஏவல் நாய்களை அனுப்பிச்சிது.

இஸ்ரேல், பாகிஸ்தானைப் பிடிச்சு முழு உதவி செய்யச் சொல்லிச் சொல்லிச்சுது. இதே வேளை, ரஸ்சியா சீனா போன்ற நாடுகளும், அம்மாவுக்கு அவசர உதவி செய்ய ஓடிவந்தினம்.

குண்டுவீச்சுவிமானங்கள், உலங்குவானூர்திகள், பலகுழல் ஏவுகணை செலுத்தியள் எண்டு, அழிவு ஆயுதங்களை யாழ்ப்பாணத்தில கொண்டுபோய்க் கொட்டிக் குவிச்சினம்.

அப்ப, சரணடையத் தயாராக இருந்த இராணுவம், புதிய ஆயுத பலத்தோட மெல்லமாக நிமிருது. இராணுவத் தலைமைப்பீடம், கட்டளைப் பீடங்களை மாற்றினாங்கள். நாங்கள் யாழ்ப்பாணத்தை விட்டிட்டு ஓடக்கூடாது, அடிபடவேணும். கண்டபடி அடி. சனங்களையும் பார்க்காதை எண்டு சொல்லி.

இதில எங்களுக்கு ஒரு சிக்கல். இடையில சிக்குப்பட்டு நிக்கிற மக்கள். யாழ்ப்பாண எல்லையில நிண்டுகொண்டு, அறிக்கைமேல அறிக்கை விடுகிறம். மக்களே, யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுங்கள் என்று. அவன் என்னடாவெண்டால், சனத்தை வெளியேறவிடாது தடுத்து, ஊரடங்குச் சட்டங்களைப் போடுறான். அப்ப நாங்கள் மக்களை வற்புறுத்த முடியாது.

இதுக்குள்ள என்ன செய்யிறான் எண்டால், ஆயுதங்களை முழுக்கக் கொட்டுறான். சாகச்சேரிக்கு என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியும். சாவகச்சேரி நகரத்தை தரைமட்டமாக்கிவிட்டான். ஐநூறு மக்கள் அதில அழிஞ்சினம். ஐயாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றினம். பெரும் அழிவைச் செய்தாங்கள்.



> புலியளின்ர கையை நீங்கள் பலப்படுத்த வேண்டும். அது உங்கட பங்களிப்பிலதான் தங்கியிருக்குது.

அப்படியிருக்கேக்க, எங்கட தலைவர் அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாங்கள் என்னத்துக்கு யாழ்ப்பாணத்தைப் பிடிப்பான். சனமும் அழிஞ்சு, சொத்துக்களும், வளங்களும் அழிஞ்சு, சுடுகாடுமாதிரியாக யாழ்ப்பாணத்தைப் பிடிக்கிறதில என்ன அர்த்தம்.

நாங்கள் பெரிதாக அடித்துக்கொண்டு போனால், பெரும் அழிவுவரும். அதை யோசிச்சுப்போட்டு, தலைவர் தனது போர்த்திட்டங்களைத் தள்ளிப்போட்டார்.

இந்த மாவீரர் தினத்துக்கு முதல் யாழ்ப்பாணம் எங்கட கைக்குள்ள இருக்கவேணும். ஆனால், இந்த சர்வதேச அரசாங்கங்கள் தலையிட்டு அம்மாவுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்ததால, பெரும் மக்கள் அழிவு ஏற்படும் என நாங்கள் பயந்ததால எங்கட தாக்குதல் திட்டங்களைத் தள்ளிப்போட்டம்.

அறிக்கையில தலைவர் சொல்கிறார். சிங்கள இராணுவம் யாழ்ப்பாணம்மீது படையெடுக்கும்போது, சாவும் அழிவுமாக பெரும் மனித அவலம் ஏற்படுகிறது. ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள், அவலமாக இடம்பெயருகினம். அப்ப இந்த முழு உலகமும் கண்ணை மூடிக் கொண்டு, வாயைப் பொத்திக்கொண்டு இருக்குது. இப்ப நாங்கள் எங்கட மண்ணுக்குத் திரும்பிப்போகேக்க, நீ வந்து தலையிடுகிறாய். சிங்களவனுக்கு முண்டுகொடுக்கிறாய்.

அப்ப தலைவர், அறிக்கையில ஒண்டைச் சொல்லுறார்.

தாக்குதல் திட்டத்தைத் தள்ளிப்போடுகின்றோமே தவிர யாழ்ப்பாணத்தை மீண்டும் பிடிக்கும் அந்த மூல உபாயத்தை நாங்கள் கைவிடவில்லை என்று. எத்தகைய தடைகள் வந்தாலும், எத்தகைய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்தாலும் யாழ்ப்பாணத்தைப் பிடிப்போம் என்று, அடித்துச் சொல்கின்றார்.

தலைவரின்ர அறிக்கையில சொல்லியிருக்கிற நான்காவது விசயம், சர்வதேச நிலைமை.

நான் ஏற்கெனவே சொன்னதுமாதிரி, சர்வதேச உலகம் ஒரு முடிவுக்கு வந்தது. இந்த அம்மாவுக்கு காசை அள்ளியள்ளிக் கொடுத்து, ஆயுதங்களைக் கொடுத்து, பயிற்சிகளைக் கொடுத்து, இந்த அம்மாவை நிமிர்த்திவிடப் பார்த்தால் அது முடியாமல் கிடக்குது. பெரிய தோல்விகள், இழப்புகள்.

அம்மையாருக்கு உதவி செய்யிறது முட்டாள்தனம். ஏனென்றால் கொடுக்கிற ஆயுதங்கள் புலியளிட்டப் போகுது. அப்ப என்ன செய்யிறதெண்டால், இரண்டுபேரையும் பிடிச்சு பேச வைக்கிறதெண்டு யோசிக்கினம். அப்ப எங்களுக்குச் சொல்லிச்சினம், நீங்களும் ஒருக்கால் முயற்சித்துப் பாருங்கோ. சமாதான வழியில பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினையைத் தீர்க்கலாமோ எண்டு முயற்சித்துப் பாருங்கோ எண்டு சொல்லிச்சினம். உலகப் பெரிய நாடுகள் எல்லாம் வந்து எங்களைக் கேட்டவை.

அப்ப நாங்கள் சொன்னம், பேசுறதெண்டால் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தோடதான் பேசுவம் எண்டு. மூன்றாந்தரப்பு மத்தியஸ்தராக நோர்வே அரசை, சந்திரிகா அரசும் நாமும் தேர்ந்தெடுத்தம். நோர்வே அரசும் இரண்டு வருடமாக எங்களுக்கும் சந்திரிகா அரசுக்கும் இடையில ஓடித்திரியுது. ஆனால் ஒண்டும் சரிவரேல்ல.

நோர்வே பிரதிநிதி அம்மாவைச் சந்திக்கிறது பின்னர் என்னைச் சந்திக்கிறது என்று இப்பிடியாகத் திரியிறார். இப்பிடியிருக்கேக்கதான் அம்மா சொல்லியிருக்கிறார், நான் இந்த நாட்டின் சனாதிபதி, உங்களைச் சந்திக்கிறன். ஆனால், புலியளின்ர தலைவர் உங்களை இன்னும் சந்திக்கேல்ல எண்டு, நோர்வேப் பிரதிநிதிக்குச் சொல்லியிருக்கின்றார். அதுக்குப் பிறகுதான், தலைவருடனான சந்திப்புக்கு ஒழுங்கு செய்தன்.

அங்க என்ன கதைபட்டது? அது பெரிசா வெளியில வரயில்ல. இவை போய் தலைவரிட்ட கேட்டிச்சினம், இந்த உலக நாடுகள் எல்லாம் இந்தப் பிரச்சினையை சமாதான வழிமூலம் தீர்க்க விரும்புகினம். சந்திரிகாவும் பேசுவதற்குத் தயார் என்று சொல்கிறார். நீங்கள் ஒருக்கால், சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்திப் பார்த்தால் என்ன என்று.

அப்ப தலைவர் என்ன சொன்னார் என்றால், உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பாவிச்சு, சந்திரிகா மக்களைப் படுத்துகிற பாட்டைப் பாருங்கோ, அவையளின்ர துன்ப துயரங்களை நேரடியாகப் பாருங்கோ. இந்த நிலைமை மாறவேண்டும். பொருளாதாரத்தடையை தொடர்ந்தும் இறுக்கி வைத்துக் கொண்டு, இவருடன் பேச முடியாது. பொருளாதாரத்தடையை நீக்கவேண்டும். பொதுசனங்கள் மேல, கிராமங்கள் மேல ஒவ்வொருநாளும் குண்டுகளைப் போடுறாங்கள். ஒவ்வொரு நாளும் சனங்கள் சாகுது. உலகத்தில அதைப் பற்றி பெரிதாக ஒரு செய்தியும் வருகுதில்லை. அதைப் பட்டியல் போட்டுக் காட்டுறம். எவ்வளவு பேர் கொல்லப்பட்டிருக்கினம் எண்டு. ஆக, இந்த யுத்த நெருக்கடிகளும் தளர வேண்டும். யுத்தத்திற்கு ஓய்வு கொடுக்க வேண்டும். ஒரு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இதை நீங்கள் செய்யிறதுக்குத் தயார் எண்டு சொன்னால், நாங்கள் பேசுறதக்குத் தயார் எண்டு தலைவர் சொன்னார்.

அப்ப, நோர்வேக்காரர் ஒண்டு சொல்லிச்சினம், தாங்கள் ஒரு திட்டம் வைத்திருக்கிறம் எண்டு. என்ன திட்டம் என்று சொன்னால், பரஸ்பரம் விட்டுக்கொடுப்பது. நல்லெண்ண முயற்சிகளைச் செய்துவிடுகிறது. அவை ஒண்டைச் செய்தால் நாங்கள் ஒண்டைச் செய்யிறது. அப்பிடி, இந்தப் போர் நெருக்கடிகளை, பொருளாதார நெருக்குவாரங்களை படிப்படியாகத் தணித்து, ஒரு இயல்பு நிலையை, ஒரு நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கவேண்டும். அதுக்கப்புறம் பேச்சுக்களை நடத்தலாம். இன்னொரு யோசனையையும் அவர்கள் தந்தார்கள், அதனையும் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறம்..

பரஸ்பரம் நல்லெண்ண முயற்சிகளைச் செய்து, ஒரு சகசநிலையை, ஒரு இயல்பு நிலையை, சமாதானப் புறநிலையை ஏற்படுத்துவதற்கான சில முயற்சிகளை முதலில அம்மா செய்யட்டும். அதற்கு ஏற்ற முறையில் நாங்கள் நடவடிக்கை எடுப்பம் எண்டு தலைவர் சொல்லியிருக்கிறார்.

இதற்கிடையில், பிரித்தானிய அரசாங்கமும், இந்தச் சமாதான முயற்சியில தாங்களும் ஏதாவது செய்யவேணும் என்று ஒரு நகர்வை மேற்கொண்டிச்சினம். என்னைக் கூப்பிட்டுக் கதைச்சினம். இந்தச் சமாதான முயற்சியில தாங்களும் ஒரு பாத்திரத்தை வகிக்கப் போவதாகத் தெரிவிச்சினம். அப்ப நான் சொன்னன் நோர்வே இந்த முயற்சியில ஈடுபட்டிருக்குது எண்டு. அப்ப அவை சொல்லிச்சினம், நாங்கள் நோர்வேக்கு எதிராகப் போகவில்லை. நோர்வே உடன் சேர்ந்து, நோர்வேக்கு பக்கபலமாக ஏதாவது செய்ய முடியுமோ எண்டு பார்ப்பம். அப்ப நாங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அவைசொல்லிச்சினம் என்னண்டு சொன்னால், எங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கு. ஐ.ஆர்.ஏ. யின்ர பிரச்சினையைத் தீர்த்திட்டம், ஸ்கொட்லான்ட்டுக்கு ஒரு பாராளுமன்றத்தைக் கொடுத்து சுயாட்சி கொடுத்திட்டம். வேல்ஸ் மக்களுக்கு ஒரு அசம்பிளி கொடுத்திட்டம். இப்பிடியாக நிறைய அனுபவங்கள் இருக்குது எண்டு சொல்லிச்சினம். மற்றது, எங்களுக்கு ஒரு வரலாற்றுக் கடமையும் இருக்குது. பிரித்தானியாவின்ர காலனித்துவ ஆட்சியிலதான் எங்கட மக்கள் தங்கள் தாயகத்தின் இறையாண்மை உரிமையை இழந்தவை. சரி, நீங்களும் முயற்சி செய்யலாம். நாங்கள் ஒருத்தரையும் வேண்டாம் என்று சொல்லேல்ல.

பிரித்தானியக்காரர்கள், இந்தியக்காரர்கள், அமெரிக்ககாரர்கள் எல்லோரும், சிறீலங்காவின்ர ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு, இறையாண்மை இந்த மூன்றையும் ஏற்று அதற்குக் கீழ்த்தான் தீர்வெண்டு சொல்லுகினம், அப்ப நீங்கள் என்ன செய்யப் போறீங்கள் என்று, நண்பர் ஒருவர் என்னைக் கேட்டார். இப்பிடித்தான் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிலேயும், ஒரு மந்திரி என்னைக் கேட்டார். என்ர நண்பருக்குச் சொன்ன பதிலைத்தான் பிரித்தானிய அமைச்சருக்கும் சொன்னன்.

அதாவது, தமிழ்மக்களின்ர தாயக மண்ணின்ர ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொண்டு, தமிழ்மக்களின்ர இறையாண்மையை ஏற்றுக்கொண்டு, ஒரு தீர்வைத் தந்தால் நாங்கள் ஏற்றுக்கொள்ளுவம். அவர் அதுக்குத்தலையைச் சொறிஞ்சார். அப்ப நான் சொன்னன், இதுதான் ஐயா எங்கட பிரச்சினை. நீங்கள் எங்களுக்கு ஒரு வரம்புகளும் போடக்கூடாதென்று.

சுயநிர்ணய உரிமை எண்டு சொன்னால், தங்கட அரசியல் அந்தஸ்த்தை, அரசியல் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கிற உரிமை. கொழும்புக்குப் போன பிரித்தானிய அமைச்சர் பீற்றர் கெயின், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படைகளை உலகம் அங்கீகரிக்கவேண்டும் எண்டு சொல்லியிருக்கின்றார். அங்கீகரி, அதுக்காகத்தானே நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறம். ஆனால், நீ எங்களுக்குச் சொல்லக்கூடாது சிறீலங்காவின்ர ஒற்றையாட்சிக்குக் கீழ்த்தான் இதை எங்களுக்குத் தருவம் எண்டு. அது எங்கட மக்கள் தீர்மானிக்கவேண்டிய விசயம். நீயோ அல்லது இந்தியாக்காரனோ அல்ல.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் நேரடியாகச் சொல்லியிருக்கின்றார். உன்ர இராணுவத்தால புலியளை வெல்லமுடியாது என்று சொல்லியிருக்கின்றார். அது ஒரு முக்கியமான விசயம். மற்றது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துத்தான் ஒரு தீர்வு வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். அதை நாங்கள் விடமாட்டம். அவர் சொன்னதைப் பிடிச்சுக் கொண்டு இருக்கப்போறம்.

தலைவரின்ர அறிக்கையை எல்லாரும் வரவேற்றிருக்கின்றார்கள். இந்தியா வரவேற்றிருக்கு, ஐரோப்பிய நாடுகளும் வரவேற்றிருக் →



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றன. ஒரு கடும்போக்கு இல்லாமலும், நிதானமாக, தமிழ்மக்களின் பிரச்சினையை தெளிவாக விரிவாகச் சொல்லி, சமாதான வழியில் நாங்கள் தீர்வு காண முயற்சிப்போம் என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் பிரச்சினை என்னெண்டால், இதுக்குப் பதில் சொல்லாமல், அம்மா இங்க நிற்கிறா. மகாராணியைச் சந்திக்கிறா. மற்ற பிரித்தானிய தலைவர்களைச் சந்திக்கிறா.

சிங்கள நாடு குட்டிச்சுவரானாலும் பரவாயில்லை, எங்கையாவது கடனை எடுத்தெண்டாலும், சண்டையை நடத்தோணும் எண்டு தான் அம்மா திரியிறா.

சண்டை தொடருமோ, சமாதானம் வருமா பேச்சவார்த்தை நடக்குமா என்பதற்கு அம்மாதான் பொறுப்பு. பிரபாகரன் பந்தை அம்மாவின்ர காணிக்க எறிஞ்சிருக்கிறார். இனி அம்மாதான் முடிவெடுக்கவேணும்.

பேச்சுவார்த்தை நடந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் தலைவர் அவர்கள் இவையளை நம்பி தன்ர இடத்தைவிட்டு வெளியில வரமாட்டார். அதை நான் உறுதியாகச் சொல்லுறன்.

பிரித்தானிய அரசு, சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சுயாட்சித் திட்டம் ஒன்றை பரிசீலனை செய்தால் என்ன என்று கேட்கிறது. சரி, முதலில அதைச் சிங்களவன் ஏற்றுக்கொள்வானா எண்டு பாப்பம். எங்களுக்கு ஒண்டு நல்லாத் தெரியும். தென்னிலங்கையிலுள்ள சிங்களப் பேரினவாதிகள், இலகுவாக தமிழ் மக்களுக்கு ஒண்டும் தரமாட்டாங்கள். சாதாரணமான இந்த மாவட்ட சபையையோ மாகாண சபையையோ கொடுக்கிறதுக்கு சண்டை பிடிக்கிற புத்தபிக்குகள், சுயாட்சி அரசு என்று சொன்னால், விடமாட்டாங்கள். ஆனால், இதை வெள்ளைக்காரர்களுக்கு விளங்கப் படுத்திச் சொல்லவேணும். அவையளும் இறங்கிப்பார்த்தால்தான் அவையளுக்கு விளங்கும். சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழ்மக்களுக்கு உருப்படியான ஒன்றையும் தராது என்பதை, மேற்குலகம் உணர்ந்தால்தான், எங்கட தனியரசுப் போராட்டத்தை ஆதரிக்கும். ஆகவே அதுக்காகவும் முயற்சித்துப் பார்ப்போம்.

பிரித்தானியாவோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ நினைக்கிறமாதிரி, சுயநிர்ணய உரிமையை, தமிழ் மக்களின் தாயகத்தை, தமிழ்மக்களின் அடிப்படை அபிலாசைகளை அங்கீகரித்து ஒரு தீர்வுத் திட்டத்தை, ஒரு சுயாட்சி அரசை தரச்சொல்லுங்கோ பாப்பம். அப்ப, அப்பிடியான தீர்வுத் திட்டம் நிராகரிக்கப்படும்போதுதான், இங்க இருக்கிற அரசுகளுக்கு, உலக அரசுகளுக்குத் தெரியும் சிங்களவர்கள் எப்பவும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வைக் கொடுக்கமாட்டார்கள் எண்டு. அப்பிடியான புரிந்துணர்வு வரும்பொழுதுதான் தமிழர்களின் தனியரசுப் போராட்டம் சர்வதேச உலகில் எடுபடும். அதுக்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும்.

சமாதானம் வரப்போகுது, பேச்சுவார்த்தை வரப்போகுது, இனி இந்த மண்மீட்புப் போர் நிற்கப்போகுதோ, உதுக்கு நாங்கள் பங்களிப்புச் செய்யவேணுமோ எண்டு சொல்லி கனபேர் நினைக்கலாம். ஆனால் உங்களுக்கு ஒண்டை நான் சொல்லுறன். புலியளின்ர கையை நீங்கள் பலப்படுத்த வேண்டும். அது உங்கட பங்களிப்பிலதான் தங்கியிருக்குது. நாங்கள் பலமாக இருந்தால்தான் எங்கட மக்களை விடுதலை பெறச் செய்யலாம். நான் தலைவரிட்ட இன்று காலை தொடர்பு கொண்டு கேட்டன். இண்டைய கூட்டத்துக்கு பெருந்தொகையான சனங்கள் வருவினம் என்ன சொல்லிறதெண்டு.

அவர் சொன்னார்.

நீங்கள் எங்கட மக்களுக்குச் சொல்லுங்கோ....

நீங்கள் அளித்த பங்களிப்பிற்கு முதலில நன்றி. ஆனால் தொடர்ந்தும் நீங்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும். புலிகளின்ர கைகளைப் பலப்படுத்த வேண்டும். நாங்கள் எங்கட இலட்சியத்தில் இருந்து இம்மியளவும் பிசகமாட்டோம்.

இதைத்தான் தலைவர் உங்களுக்குச் சொல்லச் சொன்னார்.

நன்றி. ■

# மேற்குலகத்தவரின் நாட்டம் இனப்பிரச்சினைத் தீர்விற்கு உதவுமா?

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் உலகின் கவனம் குறிப்பாக மேற்குலகின் கவனம் திரும்பியுள்ளது. இப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் இனியும் காலவிரயம் செய்தல் பிராந்தியச் சூழலில் மாற்றங்களைக் கொண்டுவந்துவிடலாம் என அவை கருதத் தொடங்கியமையே இவ்வாறு அவர்களின் கவனம் திரும்பியுள்ளமைக்குக் காரணமாகும்.

இவ்வாறானதொரு மாற்றத்திற்கு ஓயாத அலைகள் -3 நடவடிக்கையால் கிட்டிய மகத்தான வெற்றிகளே காரணமாகும். இவ் வெற்றிகள் மூலம் இனப்பிரச்சனை தொடர்



பாக சில விடயங்கள் உலகின் முன் உறுதியாக முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் முக்கியமானவையாக:-

1. சிறீலங்கா அரசினால் இராணுவ ரீதியில் இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டுவிடமுடியாது.

2. யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி காண்பதைத் தாமதப் படுத்த முடியுமே ஒழிய-அதனைத்தடுத்து நிறுத்திவிட முடியாது.

3. சிறீலங்கா இராணுவத்தால் சில இராணுவ வெற்றிகளை ஈட்டக்கூடியதாக இருப்பினும் அவற்றால் இனி இராணுவ-அரசியல் சூழ்நிலையில் திருப்பத்தை ஏற்படுத்தக் கூடிய பெரும் மாற்றம் எதையும் கொண்டு வந்துவிட முடியாது.

இவை மூன்றும் உணரப்பட்ட நிலையிலேயே மேற்குலகம் இன்று இனப்பிரச்சனைக்கு ஓர் அரசியல் தீர்வு குறித்து பிரஸ்தாபிக்க முற்பட்டுள்ளது. அதாவது, யாழ் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவம் பெரும் தோல்வியையோ அன்றி இழப்பையோ சந்திக்குமானால் அது இலங்கையின் இராணுவ அரசியல் சூழ்நிலையில் பெரு மாற்றத்தையும், பிராந்தியச் சூழ்நிலையில் புதிய நெருக்கடிகளையும் உருவாக்கிவிடும் என மேற்குலகம் தீர்மானத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையில்தான் மேற்குலகம் இன்று இனப்பிரச்சனைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்ற நிலைப்பாட்டை முதன்மைப்படுத்தத் தொடங்கியுள்ளது. இது ஒருவகையில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் வகுக்க முனையும் புதிய உலக ஒழுங்கிற்கு ஒத்திசைவான நடவடிக்கையாகவும் கொள்ளத்தக்கது.

இதன் அடிப்படையிலேயே நோர்வே அரசும், பிரிட்டன் அரசும் இவ்விடயத்தில் இன்று முனைப்பான பாத்திரத்தை வகிக்க முற்பட்டு நிற்கின்றன. நோர்வே அரசு இதற்கென ஒரு விசேட பிரதிநிதியை நியமனம் செய்துள்ள அதேவேளை, பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு இவ்விடயம் தொடர்பாக தீவிர அக்கறை காட்டிவருகின்றது. அத்தோடு இவர்களின் இம்முயற்சிகளுக்கு அமெரிக்காவின் ஆசீர்வாதமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவற்றின் வெளிப்பாடே நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் லண்டன்-கொழும்பு-வன்னி என விஜயங்களை மேற்கொண்டு வருகின்றமையும், பிரிட்டிஷ் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னின் கொழும்பு விஜயமும், தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலர் கார்ல் இன்டர்பேட்டின் அண்மைய கொழும்பு விஜயமும் பார்க்கப்படுகின்றது.

மேலும் ஐரோப்பிய யூனியன் இனப்பிரச்சனைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்று காணப்படுதல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளமையும், சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துக் காட்டிவரும் ஆர்வமும் நோக்கப்படுகின்றது.

இதேவேளை, இவ்விடயத்தில் தீவிர அக்கறை காட்டும் நோர்வே அரசு பாலஸ்தீனப் பிரச்சினை போன்றே சிக்கலான பிரச்சினைகளைக் கையாண்ட முன் அனுபவத்தின் அடிப்படையில் இப்பிரச்சினையைத் தம்மால் வெற்றிகரமாகக் கையாள முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளதோடு, அதனை வெளிப்படையாகத் தெரிவித்தும் உள்ளது.

பிரிட்டனோ, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து போன்ற தனது பிரச்சினைகளையும், ஆபிரிக்காவில் பல தேசிய இனங்களின் பிரச்சினைகளையும் தாம் வெற்றிகரமாகக் கையாண்டுள்ளதாகவும், இதனால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தம்மால் சிறந்த வழி காட்டலைச் செய்யமுடியும் எனக் கருதுகின்றது. இதனை அண்மையில் சிறீலங்காவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்ன் கொழும்பில் சுட்டிக் காட்டியும் இருந்தார்.

இவ்வாறு மேற்குலகத்தவர் தம்மால் இப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கு சிறீலங்கா அரசுமீதும், விடுதலைப் புலிகள் மீதும் சில நிர்ப்பந்தங்களைத் தம்மால் பிரயோகிக்க முடியும் என அவை கொண்டுள்ள நம்பிக்கையும் காரணமாகும். இவ்வாறான முயற்சிகளிலேயே அவை தற்பொழுது இறங்கியுள்ளன என்றுகூடக் கூறலாம்.

அதாவது பெரும் பொருளாதார நெருக்கடியில் உள்ள சிறீலங்கா அரசிற்கு நிதி உதவி வழங்குவதற்கான நிபந்தனையாக- அரசியல் தீர்வு சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பன குறித்து சில உறுதி மொழிகளை அவை கோருவதற்கு முற்பட்டு நிற்பது போல் தெரிகின்றது. சிறீலங்கா அரசு நிதி உதவிகளைப் பெறுவதற்காக பெரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளமை இதனையே வெளிக்காட்டுபவையாக உள்ளன.

குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உதவி வழங்கும் நாடுகளில் நீண்ட சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளமையும், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளமையும், இதன் விளைவுகள் என்றே கொள்ளத் தக்கதாகும்.


இதேசமயம், விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கப்பாடு தெரிவித்துள்ளமையை வரவேற்றுள்ள மேற்குலகம் இந்நிலையிலும் விடுதலைப் புலிகள் மீதும் சில அழுத்தங்களைப் பிரயோகிப்பது போன்று சில நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டுவதாகவே தெரிகிறது.

இந்தவகையில் அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் - பெப்ரவரியில் பிரிட்டனில் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டமூலம் ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வது குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது, விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு அரசியல் தீர்வு முயற்சிக்குச் சாதகமானதாக இருக்கின்ற வேளையிலும்- புலிகள் மீதும், ஒரு அழுத்தத்தைப் பிரயோகிக்க அது முற்பட்டு நிற்கின்றமையானது அவர்கள் தரப்பு இராஜதந்திரமாகவே கொள்ளப்படக்கூடியதாகும்.

இது விடுதலைப் புலிகளின் அடுத்தகட்ட இராணுவ நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒருவகை நடவடிக்கையாக இருக்கவும்கூடும். அதாவது, புலிகளின் அடுத்த கட்ட நகர்வுகள் இராணுவ-அரசியல் சூழ்நிலையில் பெரியளவிலான மாற்றங்களைக் கொண்டுவரும் எனக்கருதப்படுவதினால் அவை மேற்குலகின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளைத் தோற்றுவிப்பதாக உருவாகிவிடக்கூடும் என அவை எதிர்பார்க்கவும் கருத இடமுண்டு.

அதாவது, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பனவற்றிற்குள்ளேயே தீர்வு என எல்லை வகுத்துக்கொண்டு செயற்பட முற்பட்டு நிற்கும் மேற்குலகம். சிறீலங்கா மற்றுமொரு பெரிய இராணுவப் பின்னடைவைச் சந்திக்குமேயானால்- தமது வரம்பிற்குள் தீர்வொன்றை வலியுறுத்த முடியாது என்பதை தெளிவாகவே உணர்ந்து கொண்டுள்ளன. இந்நிலையில் இராணுவச் சூழ்நிலையில் பெரும்மாற்றங்கள் விளைவதை அவை தடுத்து நிறுத்தவே முற்பட்டு நிற்பதாகத் தெரிகின்றது.

ஆனால், மேற்குலகம் எத்தகைய முன் அனுபவத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக்கொண்டு வந்துவிட முடியும் எனக் கருதினாலும்,



அவை எத்தனை தூரம் சாத்தியமானவை என்பது கேள்விக் குரியவையாகவே இருக்கும். ஏனெனில் மேற்குலகம் அனுபவம் பெற்றுக் கொண்ட பிரச்சினைகள், பிராந்தியங்கள் என்பனவற்றில் இருந்து இப்பிரச்சினையும் சரி, இப்பிராந்தியமும் சரி வேறுபட்டதாகும். அதாவது பௌத்த சிங்களப் பேரினவாதம் என்பதும், தென்னாசியப் பிராந்தியத்தின் அரசியல் சூழ்நிலை என்பதும் பெரிதும் மாறுபட்டதாகும்.

இதற்கும்மேலாக நோர்வேயும் சரி, பிரிட்டனும் சரி ஏன் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம்சரி தாம் முன்னனுபவம் பெற்றுக் கொண்டதான அன்றி பங்காற்றியதான நெருக்கடிகளில் ஒரு முழு அளவிலான தீர்வைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இரண்டு கரிகாலர்கள்

உலகத் தமிழர்களின் வரலாற்றில் கழ்பூத்த இரண்டு கரிகாலர்களை நாங் ள் காண்கின்றோம். ஒருவர் வரலாற்றிலே னது பெயரை ஆழமாக எழுதிவைத் வர். மற்றவர் வரலாற்றையே தனது பெய க்குள் எழுதிக்கொண்டிருப்பவர். வெள் ளயரின் பிரித்தாளும் சூழ்ச்சியினால் ழந்துபோன தமிழீழ மண்ணைப் போர் லுவினாலும் புதுமை நிறைந்த போரி ல் படை நகர்த்தலாலும் மீட்டுக்கொண்டி ப்பவர். வன்னியின் பெரும் பகுதியை ஏற் கனவே மீட்டு, 300 ஆண்டுகாலப் பழமை ாய்ந்த ஆனையிறவுப் பெருந்தளத்தை ற்றாக நெருக்கி நொருக்கி அழித்துக் காண்டவர். தமிழனின் கலாச்சாரத் தலை கரான யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க அதன் வாயிலில் படை நடத்திக் கொண்டி க்கின்றார். சங்ககாலத்தின் பேரரசனான ரிகாற்பெருவளத்தான் காவிரியாற்றுக்கு அழைக்கப்படும் சிற்றூரே இலக்கியங்கள் விதந்து பாடிய வெண்ணிக்களமாகும்.

தன்னிடமிருந்த ஆளணி வலுவாலும், படைக்கல வலுவாலுமே கரிகாலன் வெற்றிக் கனியைப் பறித்துக்கொண்டா னென்பதை, அவனது புகழ்பாடும் இலக் கியங்கள் நேர்மையுடன் ஒப்புக்கொள்கின் றன. அவனிடமிருந்த வலிமை படைத்த யானைப்படை, பகைத்து வந்த சேர பாண்டி யப் படைகளையும், குறுநில மன்னர் களின் படைகளையும், தரையிலே அரைத் தது என வெண்ணிக்குயத்தியார் வியப்பு டன் பாடுகின்றார். ஆளணி படைக்கல வலுத்தான் அன்றையநாட் போர்களின் வெற்றி தோல்வியைப் பெரும்பாலும் தீர்மானித்தன.

கரிகாலனை எதிர்த்து வந்த சேர, பாண்டியரும் குறுநில மன்னருங்கூட வீரத் திற் சளைத்தவரல்லர் என இலக்கியங்கள் போற்றுகின்றன. களத்திலே தற்செயலாக தாயகத்தை மீட்கும் விடுதலைப் போரா கவே வன்னிப் போரினைக் கரிகாலன் நெறிப்படுத்தினார். நடந்து முடிந்த வன் னிப்போரும், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ் மீட்புப்போரும் வெறுமனே மண் பறிப்புப் போரல்ல, மண் மீட்புப் போர்.

தமிழீழக் கரிகாலனை எதிர்த்து வந்த சிங்களப் பேரினவாத அரசு, பெருஞ் சேரலாதன் போன்று மான உணர்வு கொண் டதல்ல... மட்டற்ற இராணுவ ஆளணி, படைக்கல வலுவினால் 'மண்தின்ன' வந்த வன்கவர்வுப்படை அது.

இருந்தாலும், ஓயாத அலைகள் நட வடிக்கைச் சமர்களிலே வரலாறு இது வரை காணாத பேருருஞ் செயல்களைக் கரிகாலன் புலியணி நிகழ்த்திக் காட்டியிருக் கிறது. தொடர்ந்தும் நிகழ்த்துகிறது. துணி வும், செயற்றிறனும், அறிவியல் வழியிலான அணுகுமுறைத் திட்டங்களும், படை குத்தாமே கற்பித்துக்கொண்ட கனவு களோடு சிறீலங்கா அரசு தேர்தற் களத் திலே வீரம் பேசிக்கொண்டிருந்தது.

## நீண்டு கொண்டிருந்த இராணுவ வேலிகள்....

மன்னாரிலிருந்து பெரியமடுவரை வந்து, அங்கிருந்து பனங்காமம், மூன்று முறிப்பினூடாக மாங்குளம் வரை நீண்டு, மாங்குளத்திலிருந்து அம்பகாமத்துக்கு வளர்ந்து, பின் மடிந்து கரிப்பட்டமுறிப் பைத் தொட்டு ஒட்டுசுட்டான் வரை ஓடி, அங்கிருந்து நெடுங்கேணி வழியாகத் தமி ழர்தம் இதயபூமியான மணலாற்றினூடா கத் திருகோணமலை வரை விரிந்து நின்ற சிறீலங்காப் படைகளின் பல அடுக்கு இரா ணுவவேலியை, ஆளணி குறைந்த கரி காலன் படையணிகள் வெட்டிப் பிரித்து உள் நுழையக்கூடுமென்று எவர்தான் நினைத்திருக்கமுடியும்?

# ஓயாத அலைகளும் தமிழீழம் நோக்கிய நகர்வுகளும்

அணைகட்டியதாக, 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெலுங்கு சோட மன்னன் புண்ணி யகுமாரவின் செப்பேட்டிலிருந்தும், பூஜா வலியவிலிருந்தும் அறியக்கிடைக்கின்றது. இவன் இலங்கையை வெற்றிகொண்டு 12,000 சிங்களப் படைவீரரை அப்பணியில் ஈடுபடுத்தினானென்றும், பூஜாவலிய சொல் கிறது. தமிழகக் கரிகாலன் காவிரிக்குக் கட் டிய அணையினால், தமிழகம் சிறப்பாகத் தஞ்சைநிலம் நஞ்சை வளத்துடன் இன்றும் பொலிகிறது. தமிழீழக் கரிகாலன் கட்டிக் கொண்டிருக்கும் புலியணையால், சிங் களப் பேரினவாத வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல், தமிழீழம் தழைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழகக் கரிகாலன் 'வெண்ணிப்போர்' நிகழ்த்திப் பெருமைபெற்றான். தமிழீழக் கரிகாலன் 'வன்னிப் போரிலே' புதுமை நிகழ்த்தி ஓயாத அலையாக வரலாற்றைத் தன்வசம் இழுத்துக்கொண்டிருக்கிறான்.

## வெண்ணிப்போர்

கரிகாற்பெருவளத்தான் ஆட்சியின்போது நிகழ்ந்த முதற்பெரும் போர் இது. இரு பெரும் முடிவேந்தரான சேரனும், பாண்டிய னும் 'குறுநில மன்னர்களுடன் சேர்ந்து வெண்ணிப் பறந்தலை' என அழைக்கப் பட்ட இடத்திலே கரிகாலனோடு மோதி னர். தஞ்சாவூரின் கிழக்கே 15 கல் தொலை விலுள்ள 'கோவில் வெண்ணி' என இன்று முதுகிலே புண்பட்ட சேரன் பெருஞ்சேரலா தன் வாளொடு வடக்கிருந்து மாண்டான் என்ற சேதியைப் புறநானூறு (பாடல் 65) புகலுகின்றது. வடக்கிருத்தல் என்பது உயிர் துறக்கும்வரை உண்ணாநோன்பிருத்தல்.

வெண்ணிப்போரில் இலக்குகள் இர ண்டு. ஒன்று தனது ஆட்சியுரிமையை நிலைநிறுத்துதல், மற்றது ஆட்சியெல் லையை நீட்டுதல். அதனால், கரிகாலன் தனது இனத்தவருடனேயே வெண்ணிப் போர் உட்படப் பெரும் போர்களைச் செய் தான். தனது எல்லையைக் கிருஷ்ணா ஆற்றுப் பகுதிவரை நீட்டினான். இமய மலைவரை படையெடுத்தானென்றும் சிலப் பதிகாரச் சேதியுண்டு.

## மண்மீட்புப் போர்

தமிழீழக் கரிகாலன் ஓயாத அலை களாக நிகழ்த்துகின்ற தாயக மீட்புப்போர் தமிழகக் கரிகாலனின் வெண்ணிப்போரி லிருந்து பெரிதும் வேறுபடுகின்றது.

சிங்களப் பேரினவாதிகளின் அரசு, செந்தமிழர் நிலங்களைத் தின்று முடிக் கும் வெறியோடு தமிழர் தாயகமான தமி ழீழத்தின் பெரும் பகுதியை அழித்தும், இராணுவ வேலிகளிட்டும், சிங்களக் குடி யேற்றங்களை அமைத்தும், தமிழரின் தன் மான, வீர உணர்வுக்கு அறைகூவல் விட் டுக்கொண்டிருக்கும் வேளையில் இழந்த களை நினைத்தவாறு அசைத்து நகர்த் தவல்ல நுட்பமிகு ஆற்றலும், ஈர்ப்புத்திற னும் கொண்ட தலைவன் ஒருவன் எச் செயலிலும் வெற்றியையே காணுவான் என்பதற்குத் தமிழீழத் தேசியத்தின் உயிர்க் காற்றான கரிகாலன் எனும் பிரபாகரன் உயி ருள்ள சான்றாக இன்று விளங்குகின்றார்.



## வன்னிப்போர் ஓயாத அலைகள் - 1

புலியணி முல்லைத்தீவு [illegible] ஜூலை 96இல் முற்றாகவும், முழுதாகவும் சிங்கள இராணுவத்திடமிருந்து மீட்டெடுத் தது. ஆயிரக்கணக்கான படைவீரரையும், படைக்கலங்களையும் சிறீலங்கா இழந் தது. இதற்காகப் புலிப்படை கொடுத்த விலை, உறுதியின் உறைவிடங்களான 315 மாவீரர்கள்.

## வன்னிப்போர் ஓயாத அலைகள் –2

கரிகாலனின் புலியணிகள் கிளிநொச் சியை செப்டெம்பர் 98இல் மீளவும் மீட்டெடுத் தன. ஆயிரக்கணக்கான சிறீலங்காப் படை யினர், வன்னி மண்ணைத் தமது குருதி யால் நனைத்து உயிர் ஒய்ந்தனர். கோடிக் கணக்கிற் பெறுமதி கொண்ட பெரும் படைக்கலங்களைப் புலியணி தன்கை யகப் படுத்திக்கொண்டது. 403 புலிமறவர் இந்த வெற்றி வேள்விக்குத் தம்மைத் தற்கொடை செய்தனர்.

## 1999.11.02 வரை

1999.11.02 விடிகாலைவரை, வன்னி மண்ணிலே சிறீலங்காப்படை போட்டிருந்த பெரும் இராணுவ வேலி சிதைக்கப்பட முடியாததென்றே இராணுவ வல்லுநர்கள் கணக்குப் போட்டிருந்தனர். ஆளணி, படைக் கல மேலாண்மை, உலக வல்லரசுகளிடம் நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளி நாடு, உள்நாட்டிற் பெற்ற போரியற் பயிற்சி கள், 'தோற்கடிக்கப்பட முடியாதவர்' என்ற திமிரை அரசுக்கும், இராணுவத்திற்கும் ஊட்டியிருந்ததால், ஜெயசுக்குறு, எடிபல, ரிவிபல, ரணகோஷ, வாட்டர்செட் என்று பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூல மாக, வன்னி நிலத்தில் அங்குலம் அங்குல மாக நகர்ந்து அகலக் கால் பரப்பி நின் றது. மிச்சமுள்ள நிலம் 10 வீதம் மட்டுமே என்றவாறு சொற்ப நாட்களிற் கரிகாலன் செருக்கையடக்குவோமென்று தமக் அடுக்கடுக்காகப் போடப்பட்ட இரா ணுவ வேலிகளும், நீண்டுகொண்டே போகும் பதுங்குகுழிகளும், 25 மீற்றருக் கொன்றாகச் சில இடங்களில் இன்னும் நெருக்கமாகவிருந்த காவல் அரண்களும், குறுந்தூர நீண்டதூர எறிகணைத் தளங் களும் எண்ணுக் கணக்கற்ற சிறுமுகாம் களும், பல்லாயிரக் கணக்கான படை வீரர்களும், அவர்களுக்கு வழங்கப்பட்ட 'அரசவாழ்வு' வளங்களும் ஒரு வல்லரசை எதிர்கொள்ளும் வகையில் அமைந்திருந் தன. காலங்காலமாக நிலம். உடைமை களை இழந்தும், பொருளாதார மருத்துவ மனித நீதித்தடைகளால், பசியிலும் நோயி லும் அரையுயிரோடு நடமாடும் தமிழீழத் திலிருந்து கரிகாலன் கட்டியெழுப்பிய சிறு படையினால் சிறீலங்காப் படையை வெற்றி கொள்ள முடியாதென்று உலகம் எண் ணியது, முடிவும் செய்துகொண்டது.

## யாரும் உறவல்ல.....

கரிகாலன் புலிப்படைக்குக் கண் ணசைவிலேனும் உதவிசெய்ய எவரும் இருக்கவில்லை. உலகத்தின் கண்களுக் குத் தமிழீழத்தின் உயிர்த் துடிப்புத் தெரிய வில்லை. கண்ணீரும் அவலமான ஏதிலி வாழ்வுமாக இருந்த தமிழீழ மக்களின் ஆன்மரீதியான உறுதி நிறைந்த உற வைத்தவிர புலித்தலைவன் கரிகாலனுக்கு வேறெந்தத் துணையும் கிடைக்கவில்லை. மக்களின் துயரத்தைத் தனது தோளிலே சிலுவையாகத் தாங்கி, அவர்களுக்கு விடி யலைக் காட்டவேண்டிய பொறுப்பு அவ ருக்கு இருந்தது. கொஞ்சங்கொஞ்சமாக அரிக்கப்படும் தமிழ் மண்ணை மீட்க வேண்டிய கடமையிருந்தது. புலிகளின் முடிவு இன்றோ நாளையோ என்று எதிர்வு கூறுவோரின் 'மனச்சாட்சியை' உலுக்க வேண்டிய தேவை இருந்தது.

## ஓயாத அலைகள் - 3

தமிழீழக் கரிகாலனின் புலியணி, வன்னி யின் விடுதலையை மின்னல் விரைவில் விளைத்த விந்தை 1999.11.02 விடிகாலை கேட்ட முதல் வெடியோசையோடு அரங் கேறியது. உலகத்தின் காதுகள் செவிபட, புலித்தலைவர் ஊதிய போர் முரசத்தில், ஊளைக் காற்றில் எழுந்து பறந்து அடங் கும் சருகுகளாக வன்கவர்வுப்படை அழித் தொழித்த வரலாற்று விந்தை புலியணியின் போர்வலுவையும், உறுதியையும் பறை சாற்றத் தொடங்கியது. →



40060
37 44
53000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கலகலத்து வீழ்ந்த கோட்டைகள்

ஒட்டுசுட்டானிற் கேட்ட முதல் முழக்கத்தின் அதிர்வு அடங்குவதற்குள், பத்தே மணித்துளியில் ஒட்டுசுட்டானின் சிறீலங்கா இராணுவம் கட்டிவைத்த பெரும் முகாம்கள் கலகலத்துவிழ, உலகப் புகழ்பெறப்போகும் தொடரோட்டத்தைச் சிங்களப் படைகள் தொடங்கின. ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஒதியமலை, ஆல்வெட்டிக்குளம், தனிக்கல், சிலோன் தியேட்டர் பண்ணையென்று, மணலாற்றின் பெரும்பகுதிகள் ஒரு புறத்திலும், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, அம்பகாமம் என்று இன்னொரு புறத்திலும் மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம், பனிக்கநீராவியென்று கண்டிப் பெருஞ்சாலைப் பகுதியிலும், பனங்காமம், மூன்றுமுறிப்பு, பள்ளமடு, பெரியமடு என்று பிறிதொரு புறத்திலுமாக, சிறீலங்காப் படைகள் ஆண்டுக்கணக்காகப் பெரும் ஆளணி, ஆயுத இழப்புக்கு மத்தியிலே பிடித்து வைத்திருந்த வன்னிநிலம், அரை மாதத்துக்குள் புலியணிகள் கைகளுக்குட் தஞ்சம் புகுந்துள்ளது.

வடமுனையிலே ஆனையிறவுப் பெருந்தளம், பளை உள்ளிட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசம், வடமராட்சி கிழக்கின் பெரும் பகுதி, தென்மராட்சியின் சில பகுதிகள், யாழ் நகரின் நுழைவாயிலினையும் விடுதலைப் புலிகளின் படையணிகள் மீட்டன.

## மக்கள் நெருக்கமும் அறிவியற் போரும்

என்றுமில்லாதவாறான மக்களின் எழுச்சியில் எல்லைப்படையாக முன்னரங்கலும், கிராமியப் படையாகப் பின்னரங்கிலும் மக்களைப் புலிகளின் தலைவர் ஒருங்கமைத்தார். குறுந்தூர நெடுந்தூர எறிகணைகளின் உச்சப் பயன்படுத்தலால், உயிரிழப்பு மிகவும் குறைந்தது. ஓயாத அலைகள் 3 போரின் முதற்கட்டத்தில் அதாவது வன்னியின் தென்முனையில் வீசிய அலையடிப்பின் மூலம் 1500 சதுர கி.மீற்றருக்கும் மேலான நிலம் மீட்கப்பட்டிருந்தும் 179 மாவீரரை மட்டுமே தமிழீழம் விலையாகக் கொடுத்திருக்கின்றதென்பது மாவீரர் பணிமனையின் 20.11.99 நாளைய குறிப்பு. கரிகாலன் நிகழ்த்திய வன்னிப்போரின் அறிவியற் தொழில்நுட்பத்துடனான படை நகர்த்தலை இது தெளிவாக விளக்குகின்றது.

## சிறீலங்கா ஏடுகள் சிந்திக்கின்றன.

மிகக் கடுமையான தொடர்பூடகத் தணிக்கையைச் சிறீலங்கா அரசு நடைமுறைப்படுத்தியிருந்தாலும், தமிழீழ விடுதலைக்கெதிராக நஞ்சைக் கக்கும் நாளேடுகள்கூட இந்த வியத்தகு வெற்றியை வெதும்பி வெளியிட்டிருக்கின்றன.

ஆண்டுக்கணக்கில் அரசபடை பிடித்த நிலத்தை நாட்கணக்குக்குள் புலிகள் மீளக் கைப்பற்றினர் என்று 'இக்பால் அத்தாஸ்' கூறுகின்றார்.

## தலைகள் உருளுகின்றன...

சிறீலங்கா அரசு இந்த ஓயாத அலைகள்- 3இல் பெற்ற தோல்வியை முடிந்தளவு மறைத்தாலும், கட்டளைப் பீடங்களிற் செய்யப்பட்ட அதிரடி மாற்றங்கள், இடமாற்றங்கள், கட்டாய விடுப்புகள், விசாரணை அமைப்புகள், ஓடும் படையினரைத் தேடும் நடவடிக்கைகள் அவர்களது நடுக்க நிலைகளை வெளிப்படுத்துகின்றன.

டிசம்பர் 11ஆம் நாள் வடக்கு நோக்கித் திரும்பிய ஓயாத அலைகள் 3இன் அடுத்த கட்ட நடவடிக்கையை புலிகள் பரந்தன், உமையாள்புரம் என ஒருபுறமும், வெற்றிலைக்கேணி , கட்டைக்காடு என இன்னொரு புறமும், கேரதீவு, தனங்கிளப்பினூடாக இன்னொரு புறமுமாகக் கைப்பற்றி, வலிமைமிக்க ஆனையிறவு முகாமைச் சுற்றிவளைத்துத் தாக்கி 22.04.2000 அன்று கைப்பற்றினர். 26.09.2000 அன்று ஓயாத அலைகள். 4 நடவடிக்கை ஆரம்பமாகி வெற்றிகரமாகத் தனது முதற்கட்டத்தினை பூர்த்தி செய்துள்ளது. தற்பொழுது சமாதானமுயற்சிகளுக்கான நல்லெண்ண சமிக்ஞையாக தேசியத் தலைவர் அவர்களால் கடந்த 24.12.2000 இலிருந்து 24.01.2001 வரையான ஒரு மாத காலத்திற்கு யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டு இப்பொழுது புலியணிகள் அமைதி காக்கின்றன.

## அள்ளியவை கையிலே ஏறினால்

நடந்து முடிந்த ஓயாத அலைகள்-3, ஓயாத அலைகள்- 4இல் கரிகாலனின் புலியணி அள்ளிய ஆயுதங்கள் கொஞ்ச மல்ல... அவற்றைத் தமிழீழம் துணிந்து கைகளிலே ஏந்திக் கொண்டால், வன்னி விடிந்ததுபோல, தமிழீழம் முழுவதும் உறுதியாக விடுதலையாகும் என்பதில் இப்போது எவருக்கும் ஐயமில்லை. புலிகளின் முற்று முழுதான தோல்வி இன்றா? நாளையா? என்று நினைத்த உலக அரசுகள், செய்தி ஊடகங்கள் இப்போது தமிழீழம் பிறக்கப்போவது இன்றா? நாளையா? என்று நினைக்கவும், எழுதவும் தொடங்கியிருக்கின்றன. அத்தகையதொரு வரலாறு காணாப் போரியற் புதுமையைப் புலிகள் நிகழ்த்தியிருக்கின்றனர். இந்தப் புதுமையின் அரிச்சுவடிகளைத்தானும் பெரும் வல்லரசுகள்கூடத் தமது போரியல் நுட்பங்களாற் புரிந்துகொள்ள முடியாமல் விழி பிதுங்குகின்றனர். அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவும் தொடங்கியுள்ளனர்.

## இன்றா? நாளையா? தமிழீழம் எப்போது?

ஓயாத அலைகள் 3 உலகத்தின் முன் இந்தக் கேள்வியை ஒலிக்க விட்டிருக்கிறது. கற்பனைக்கெட்டாத அற்புதப் போரியலைத் தனக்குள்ளே வைத்து நெறிப்படுத்தும் கரிகாலனாற்றான் இந்தக் கேள்விக்கு விடைசொல்லமுடியும். கரிகாலன் தமிழீழ மக்களைக் கேட்கின்ற கேள்வி

**தமிழா.... நீ என்று திரண்டு வந்து தமிழீழ விடியலுக்கான உன் பங்களிப்பை ஆற்றப் போகின்றாய்? என்பதுதான்.** ■



## ஓயாத அலைகள் -3 தொடர் நடவடிக்கையில் வன்னியின் வடமுனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

**'ஓயாத அலைகள்—3' தொடர் தாக்குதலில் மாவீரராகிய போராளிகளின் விபரம்**

11.12.1999 அன்று கிளாலிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**லெப். வேங்கை**
கதிர்வேல்சாமி அசோகன்
9ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லை
(தும்பளை கிழக்கு, பருத்தித்துறை, யாழ்)

12.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**லெப் பாணன் (நாதன்)**
கன்னாசி நாகராசா
புதுக்குடியிருப்பு, ஜெயபுரம்,
கிளிநொச்சி, வன்னி
(ஆஸ்பத்திரி வீதி, வட்டக்கச்சி,
கிளிநொச்சி, வன்னி)

17.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**கப். கஜேந்திரன்(பாசமணி)**
இராசலிங்கம் ஞானசிங்கம்
அருள்நேசபுரம், கொக்கட்டிசோலை,
மட்டக்களப்பு

**2வது லெப். எழிற்சியன்**
வல்லிபுரம் ஜீவிதன்
பிரதான வீதி, மகிழடித்தீவு, கொக்கட்-
டிச்சோலை, மட்டக்களப்பு

**லெப். வீரதர்சன்**
அருள்நாயகம் விமலேஸ்வரன்
கோவில் வீதி, பாம்கொலனி, மாங்கேணி,
மட்டக்களப்பு

30.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**லெப். யோககீர்த்தி.**
இராமலிங்கம் சிங்கராஜா
ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று-7, அம்பாறை

25.12.1999 அன்று ஆனையிறவுக் கடல் நீரேரிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்

**கடற்சிறுத்தைக் கரும்புலி மேஜர் நந்தன்**
தர்மராசா தயாளன்
இல. 250, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, வன்னி
(இல. 29, குமரபுரம், பரந்தன், கிளிநொச்சி)

16.12.1999 அன்று ஊரியான் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**2வது லெப். தயாபரன்**
இராசலிங்கம் தயாபரன்
2ம் வட்டாரம் கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு, முல்லை
(சேனைப்புலவு, நெடுங்கேணி, முல்லை)

26.12.1999 அன்று ஊரியான் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**லெப். புரட்சிமாறன்**
நல்லதம்பி உதயகுமார்
உடுவில், சுன்னாகம், யாழ்

**2வது. லெப். படைமுதல்வன்**
ஜெயானந்தம் கெனடி சாள்ஸ்
செல்வபுரம், முல்லை

**2வது லெப். சென்னம்பி**
கலாநாதன் பிரதீபன்
நவ்வி, பாலமோட்டை, ஓமந்தை, வவுனியா
(நுணாவில், சாவகச்சேரி, யாழ்)

**கப். கனகராசா**
ஞானமுத்து ஜெபநேசன்
தயாபரன் குடியிருப்புத்திட்டம்,
கங்காணிக்குளம், இலுப்பைக்குளம்
(புதியவேலர் சின்னக்குளம், ஓமந்தை,
வவுனியா)

31.12.1999 அன்று சுட்டதீவுப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**2வது லெப். நிமலன்**
தம்பிப்பிள்ளை சசிக்குமார்
அம்பலப்பெருமாள் சந்தி, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி (ஏறாவூர், மட்டக்களப்பு)

11.12.1999 அன்று தனங்கிளப்புப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்

**மேஜர் தமிழ்நெஞ்சன் (கேதீஸ்வரன்)**
வல்லிபுரம் ரஜேந்திரன்
கொம்மாந்துறை, செங்கலடி, மட்டக்களப்பு

30.12.1999 அன்று தனங்கிளப்புப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்

**லெப். லவன்**
ரெட்ணம் சந்திரமோகன்
அக்கரைப்பற்று, அம்பாறை.

**2வது லெப். குமுதினியன்**
சங்கரப்பிள்ளை அரியதுரை
மண்டூர், மட்டக்களப்பு.

13.12.1999 அன்று கட்டைக்காட்டுப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்

**2வது லெப். துளசி**
கந்தசாமி கருணேஸ்வரன்
இல: 123, 2ம் யூனிற், திருவள்ளுவர்புரம்,
யோகபுரம், மல்லாவி
(முகாவில், இயக்கச்சி, பளை, யாழ்)

**கப்டன் ஈழத்தரசன்**
முருகையா கேதீஸ்வரன்
சிறுப்பிட்டி, யாழ்
(பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி)

12.12.1999 அன்று வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**லெப். கேணல் குமணன் (சாள்ஸ்)**
கந்தையா சிவனேஸ்வரநாதன்
கோவிற்புளியங்குளம்,
இரணைஇலுப்பைக்குளம், வவுனியா

**லெப். இசையழகன்**
நவரத்தினராஜா நவநீதன்
செல்வபுரம் வடக்கு, வவுனிக்குளம்

**லெப். நேசகுமார்**
சித்திரவேல் தேவராசா
முன்னம்போடிவெட்டை, தோப்பூர், மூதூர்,
திருமலை

**மேஜர் இன்னமுதன்**
இராசரத்தினம் பார்த்தீபன்
7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லை

13.12.1999 அன்று மண்டலாய்ப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். நல்லமுதன்**
அந்தோணி செல்வமாணிக்கம்
புன்னைநீராவியடி, பிரமாந்தாறு, விசுவமடு
(01ம் கட்டை, பரந்தன், கிளிநொச்சி)

**லெப். கோலமகன்**
இராமச்சந்திரன் சசிக்குமார்
காக்கையன்குளம், முள்ளிக்குளம், மன்னார்
(10ம் ஏக்கர், மதியாமடு, புளியங்குளம்,
மன்னார்)

16.12.1999 அன்று பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்வர்கள்.

**வீ.வே. விதுரன்**
சண்முகலிங்கம் கஜேந்திரன்
மங்கைகுடியிருப்பு, 04ம் கட்டை, அக்கராயன்,
கிளிநொச்சி (8ம் வட்டாரம், வேலணை மேற்கு,
வேலணை, யாழ்)

**லெப். வீரமகன்**
வெல்வராசா ரஜிந்தன்
30 வீட்டுத்திட்டம், விநாயகபுரம், துணுக்காய்,
வன்னி (தம்புஒழுங்கை, ஆடியபாதம் வீதி,
நல்லூார், யாழ்)

26.12.1999 அன்று பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். தமிழ்பருதி**
இருதயநாதன் டேவிற்கனிசியஸ்
ஆரோக்கியநாதர் தேவாலயம், இராமநாதபுரம்,
கிளிநொச்சி (சென் ஜேம்ஸ், இளவாலை, யாழ்)

**கப். அனல்மணி**
ராமு லிங்கம்
இருட்டுமடு, உடையார்கட்டு, முல்லை
(பெரியகந்தலக்கட்டி, கண்டி)

**மேஜர். வன்னியன்**
வீரபுத்திரன் ரமேஸ்பாபு
கொக்காவில் வீதி, வசந்தபுரம், துணுக்காய்
(குரங்குமலை, கற்றன், கண்டி)

25.12.1999 அன்று முகாவில் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**கரும்புலி மேஜர் ஆதித்தன்**
பழனியாண்டி சுதாகரன்
சம்புமால் கந்த இல. 03 குறுாப், தெரணிகல,
பதுளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# எனது நிழல் தரு விருட்சம் வேரோடு சாய்க்கப்பட்டது

*சிங்களப்படையின் கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களால் தங்களது உறவுகளை இழந்து அல்லலுறும் ஆயிரக்கணக்கான தமிழீழக் குடும்பங்களில் குடும்பத்தலைவனை, தந்தையை இழந்து அல்லலுறும் ஒரு குடும்பத்தின் உணர்வுக் குமுறலை, அவல வெளிப்பாடாக மகனின் வாக்கு மூலமாக இங்கே பதிவாகின்றது. அந்நியக்கரங்களில் நசியுண்ட மனிதங்களைப் பிரிந்து அவர்களது உறவுகள் படும் பாடு சொல்லி மாளாது.*
*சம்பவம் நடைபெற்ற காலம்– 18.09.1992*
*நடைபெற்ற பிரதேசம்–யாழ் குடாநாடு*

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்."

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கமைய எனது தந்தை தனது மகன் கற்றறிந்தார் முன்னிலையில் நிமிர்ந்து நடக்கத் தக்கவனாக கல்வி கேள்விகளில் வல்லவனாக வரவேண்டும் எனக் கனவு கண்டார். நாளும் பொழுதும் அவரது கனவுகளும் இலட்சியங்களுமாக நான் அமைந்திருந்தேன்.

தமிழீழத்தின ஒவ்வொரு சாதாரண குடும்பங்க்ளிலும் உள்ள தந்தையர்களைப் போன்று எனது தந்தையார் வெறுமனே ஒரு மகனுக்கு பிதா ஆற்ற வேண்டிய கடமைகளை மாத்திரம் செய்யவில்லை. அதனிலும் மேலாக தாயாக, நண்பனாக, சகோதரனாக, ஆசிரியனாக மொத்தத்தில் நான் பிறந்ததிலிருந்து 14 வயது வரைக்கும் எனக்கு எல்லாமாக எனது தந்தையார் இருந்தார். அதாவது நான் 14 வயதில் எனது அப்பாவைச் சிங்களப்படை ஏவிய ஆட்லறி எறிகணையால் கணப்பொழுதில் இழந்தேன்.

தான் உயிரோடு இருக்கும் வரைக்கும் மகன் கிணற்றில் தண்ணி அள்ளக்கூடாது என்று ஒவ்வொரு நாளும் அதிகாலையில் தான் கிணற்றில் அள்ளி எனக்கு குளிக்க வார்த்த அப்பா. ஞாயிற்றுக்கிழமைகளில், மகனுக்கு சம்போ வைத்து தோய்ந்தால் தீங்காகும் என்று தானே செவ்வரத்தம் இலை அரைத்து எனக்கு கண்கள் எரிய எரிய முழுக்காட்டும் அப்பா. தமது ஒரேயொரு மகனை தான் பெற்ற செல்வம் என எப்பொழுதும் தமது துவிச்சக்கரவண்டியில் முன்னிருத்தி எனக்கு ஊரெல்லாம் சுற்றிக்காட்டிய தந்தையாரை சிங்களப் படைகள் ஒரு நிமிட நேரத்தில் என்னிடம் இருந்து பறித்தெடுத்து விட்டனர். எனக்கு அன்பையும் பாசத்தையும் அபிசேகம் செய்து வளர்த்த அப்பா இறுதியில் இரத்தம் சிந்தியவாறு இந்த மண்ணில் இருந்து மறைக்கப்பட்டார்.

தம்மபதம் போதித்த புத்த பெருமானின் படைகளின் புண்ணியத்தால் எனக்கு 14 வயதிலே மனித இரத்தம் இன்னதென்று அறியவைக்கப்பட்டது. அதுவும் எனக்கும் எனது தாய்க்கும் எல்லாமாக இருந்த எனது தந்தையாரின் இரத்தமே என்மீது முழுகவார்க்கப்பட்டது.

இரத்தினத்தார், எனது தந்தையாரை சுற்றமும் நட்பும் இவ்வாறுதான் அழைப்பார்கள் நான்கூட; சில நேரம் விளையாட்டாக இவ்வாறுதான் அழைப்பேன். 6அடி உயரம், கம்பீரமான தோற்றம், மண்வெட்டி பிடித்தும், கலப்பை பிடித்தும் முறுக்கேறிப்போன உடம்பு, நான் அறியத்தக்கதாக எனது தந்தையாரின் கரங்கள் என்றுமே மென்மையானதாக இருந்ததில்லை. எப்பொழுதும் காய்ந்து உரமேறிப் போயிருக்கும். வாய் என்றும் திருநாவுக்கரசரின் கூற்றாயினவாறுப் பதிகத்தை முணுமுணுக்கும் அல்லது மணிவாசகரின் திருவாசகத்தை தழுவும். இதுதான் எனது தந்தையார் இரத்தினத்தார் பற்றிய வர்ணனை. மிதிச்ச இடத்தில் புல் கூடச் சாகாது என்று எனது தந்தையாரின் குணாம்சத்தை அவரின் நண்பர்கள் கூறுவார்கள்.

அவர் பலி போனதோ கோரமான முறையில். மனைவி பார்த்திருக்க மகன் அவரருகே ஒதுங்கியிருக்க சிங்களவன் ஏவிய எறிகணை அவரது இடது மார்பைத் துளைத்துச் சென்றது. இந்நிகழ்ச்சி நடந்த போது நான் 14 வயதுச் சிறுவன் நிழல் தரும் வயதல்ல நிழலுக்குக் கீழ் வாழும் வயது. ஆனால் இனவெறி அரசின் பயங்கரவாதப் படைகளால் எனது நிழல் தரு விருட்சம் வேரோடு சாய்க்கப்பட்டது. என்றுமே வெளியுலகம் பற்றி அதிகம் அறிந்திராத எனது நோயாளித் தாயாரும் நானும் அநாதைகளானோம் புத்தரின் சீடன் மகிந்தனின் வழித்தோன்றல்களால். சிங்களம் அழித்த 65000ற்கும் மேற்பட்ட தமிழர்களின் பட்டியலில் எனது தந்தையின் பெயரும் இணைந்து கொண்டது.

ஆனால் இதன் பின்னால் சிதைந்து போன சிறிய குடும்பத்தின் அவலத்தைச் சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது.

எனக்கு ஐந்து வயதிலிருந்தே, வெறுமனே பள்ளிப் படிப்பு மாத்திரம் ஒருவனைப் பூரணமாக்காது என்பதனை அனுபவ வாயிலாக ஆய்ந்துணர்ந்ததனால் அன்றே பொதுஅறிவை ஊட்டவல்ல நூல்களையும் சஞ்சிகைகளையும் தேடித் தேடி வாங்கி வருவார். அன்றைய காலகட்டத்தில் நாங்கள் கிளிநொச்சியில் இருந்தோம். இங்குதான் எனது தந்தையாரின் வயல்களும் தோட்டங்களும் இருந்தன. ஒவ்வொரு புதன் கிழமையும் கிளிநொச்சிச் சந்தைக்குத் தமது விளைபொருட்களை எடுத்துச் சென்று விற்றுவிட்டு வரும்போது எனது தந்தையின் பையில் அம்புலிமாமா, கோகுலம், ரத்னபாலா, அர்ச்சுனா என ஏதாவது சிறுவர் சஞ்சிகைகள் இருக்கும். வேறு யாராவது மகனுக்கு வேறு ஏதாவது பண்டங்கள், விளையாட்டுப் பொருட்கள் வாங்கிக் கொடுக்கவில்லையா என்று கேட்டால் இந்தக் கமக்காரரோ தமது மகனுக்கு தாம் கொடுக்க விரும்புவது பரந்த அறிவைத்தான் ஆகையால் எப்பொழுதும் எனது மகனுக்கு நூல்களை மாத்திரம்தான் நான் வாங்கிக் கொடுப்பேன் என்று கூறுவார்.

கிளிநொச்சியின் இரணைமடு குளத்தின் வாய்க்கால் கரையோரம் என்னை தோள்மேல் ஏற்றிக் கொண்டு கல்கியின் பார்த்தீபன் கனவு நாவலை தனக்கேயுரியபாணியில் அந்தக்கதையை சுருக்கிக் கூறுவார். நான் வளர்ந்த பின்னும் அதாவது கல்விக்காக யாழ்ப்பாணத்திற்கு வந்த பின்னும் அந்தக்கதையை அடிக்கடி கூறுவார். ஆனால் இன்று எனக்கு மிஞ்சியது அப்பாவின் பார்த்தீபன் கனவுக் கதையும் அப்பாவின் கோரமரணத்தின் இறுதிக் கட்டமும்தான். இதை என்னால் என்றுமே மறக்கமுடியாது.

'எனது மகனின் நல்வாழ்விற்காக இனி எனக்கு குழந்தைகள் வேண்டாம் இவன் ஒருவனே போதும் முருகண்டியான் தந்தது. இவனை வடிவாய் வளர்ப்பதுதான் இனி எங்கடை கடமை' என எனது நல்வாழ்விற்காக தனது இன்பங்களை நலன்களை ஒறுத்துக்கொண்டார். ஆரம்பகாலங்களில் நான் குழப்படி செய்கின்ற வேளைகளில் அம்மா இதைச் சொல்லி வெருட்டுவாள் உன்ர கொப்பரால் இன்னொரு தம்பி தங்கைச்சி இல்லை அதுகள் இருந்தால் இப்படிச் செய்வியோடா என்பாள். இன்றோ இதை நினைத்து நினைத்துப் புலம்புகின்றாள் தாயகத்தில் இருந்து. நானோ ஏதிலியாய் முகவரி இழந்து புலம்பெயர் நாடொன்றில்.

இதற்கெல்லாம் நாங்கள் செய்த குற்றம்தான் என்ன. எனது தந்தையும் நாங்களும் தமிழர்களாய் இருந்ததுவே அதுவும் தமிழீழத் தமிழர்களாய் இருந்ததுவே.

எனது தந்தையின் மரணம் நான் உறங்கும் நடக்கும் போதும் என்றுமே எனது கண்களை உறுத்தும். சிங்களத்தின் ஆட்லறிகள் ஒவ்வொன்றும் தாயகத்தில் அழிக்கப்படுகின்றனவாம் அல்லது கைப்பற்றப்படுகின்றனவாம் எனும் செய்திகள் கேள்விப்படும்போது மனம் சொல்லவொண்ணா புளகாங்கிதம் அடையும். ஆனால் ஆட்லறிகளால் எனது முகந்தெரியா உறவுகள் பலியாகின்றன எனும் செய்திகள் வரும் போது புரிந்து கொள்ள முடியாத கொதிப்பலைகள் எழும், எனக்கே எதிரே இருப்பவற்றை உடைக்கத் தோன்றும். 18.09.1992இல் குபுக் குபுக் என்று என் மேல் பாய்ந்த எனது தந்தையின் இரத்தத்தின் வாசனை நாசியில் அடிக்கும். உடலில் பிசு பிசு என ஒட்டுவது போல இருக்கும்.

18.09.1992இல் எனது வாழ்வின் திசையை மாற்றிய எனது தந்தையின் மரணம் வெறுமனே என்னை ஜடமான மனிதனாக நடமாட வைத்தது. ஆனால் எனது தாயாரையோ, தற்காலிக நோயாளியாக அப்பாவின் பராமரிப்பில் வாழ்ந்தவள், இன்று நிரந்தர நோயாளியாக வாழ்கிறாள்.

மனித வாழ்விலே இறப்பு என்பது நியதிதான். ஆனால் ஒரு பாவமும் அறியாது, தனது மகனிற்கு, மனைவிக்குமான நல்வாழ்வைத் தவிர வேறு ஒருவருக்கும் தீங்கெதனையும் புரியாது வாழ்ந்த மனிதனை சிங்கள அரசபயங்கரவாதம் வேட்டையாடியதற்கு ஒரு காரணமும் கூறமுடியாது. இதேபோல சிங்களப் பயங்கரவாதம் தனது இனவாத இரத்தப்பசிக்கு பலிவாங்கிய ஆயிரக் கணக்கான தமிழர்களின் சந்ததிகள் வெளிப்படுத்தும் உணர்வுப் பிழம்புகளுக்கு பதில் சொல்ல வேண்டிய காலம் விரைவில் வருவது திண்ணம்.

ஆனால் சிங்களம் அழித்தவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்ட இழப்பை எந்தவொரு நஸ்டஈட்டாலும் ஈடுசெய்ய முடியாது.

*இரத்தினத்தாரின் மகன்.*

# தெளிவான அறிவிப்பு!

இலங்கையில் எதிர்காலமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் பல கேள்விகளும் நெருக்கடிகளும் உள்ள நிலையில் பலராலும் எதிர்பார்க்கப்பட்ட தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரை மேற்கூறப்பட்ட விடயங்கள் குறித்து தெளிவானதும், திடமானதுமான அறிவிப்புக்களைச் செய்வதாக உள்ளது. அதாவது போர், அமைதி, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பன குறித்துத் தெளிவான அறிவிப்புக்களை அவர் செய்துள்ளார்.

தமது போர் குறித்த நிலைப்பாட்டை விபரித்துள்ள தலைவர் அவர்கள் 'இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்கள இறையாண்மையைத் திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப் படை என்ற ரீதியில் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப் போவதில்லை. எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும், எத்தனை இடர்களை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டே தீரும்' என உறுதிபடக்கூறியுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் இக் கூற்றுக்கள் இராணுவ ஆக்கிரமிப்பு அகற்றப்படும் வரை, விலக்கப்படும் வரை யுத்தம் தொடர்வதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன என்பதை வெளிப்படுத்தும் ஒன்றே ஆகும். இது விடுதலைப் புலிகள் சமாதானம் பற்றிப் பேசுவதற்கு மாறானதொரு அறிவிப்பல்ல. தமது தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்பையும், ஒடுக்குமுறையையும் நீக்கும் கடப்பாடு விடுதலை அமைப்பிற்கு உண்டு என்ற தத்துவத்தின்பாற்பட்டதே.

இதேவேளை, சமாதானம் அமைதி குறித்து தெளிவாகவே குறிப்பிடும் தலைவர் பிரபாகரன் அவர்கள் 'சமாதான வழியில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கின்றது. என வலியுறுத்தியுள்ளதோடு 'சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும், இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே நாம் வலியுறுத்துகின்றோம்' எனத் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கான இயல்பு நிலை, நல்லெண்ண புறநிலை என்பவை பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகள் அல்ல என்பதைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளதன் மூலம் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை என்பதை உறுதிபடக் கூறியுள்ளார். இதனையே நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சுல்ஹெய்முடம் வெளிப்படுத்தியிருந்தார்.

அத்தோடு, இவ்வாறான இயல்பு நிலை ஏன் தேவை என்பதையும், தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டத் தவறவில்லை. 'இருபது ஆண்டிற்கு மேலாக பரஸ்பரம் பகைமையுடனும், சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இருதரப்பினரும் சண்டையைத் தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல' என அவர் தெரிவிக்கும் கருத்து மிகவும் யதார்த்தபூர்வமானது என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது.

ஆனால் சமாதானம் குறித்தோ அன்றி அரசியற் தீர்வு குறித்தோ சந்திரிகா அரசாங்கம் தெளிவானதும், திடமானதுமான நிலைப்பாட்டுடன் இல்லை என்பதையும், சுட்டிக்காட்டும் தலைவர் பிரபாகரன் அவர்கள் 'பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களும், கடும் கோட்பாட்டாளர்களும் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருப்பதினால் இந்த அரசானது பல நாக்குகளினால் பேசுகின்றது' எனவும் தெரிவிக்கின்றார்.

ஆனால் அரசின் நிலை குழப்பமாக இருப்பினும் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வானது எவ்வகைப் பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும், தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியுள்ளார். 'எமது மக்களின் விருப்பமெல்லாம் ஒன்றுதான் எமது சொந்த மண்ணில் நிம்மதியாக நிலையாக வாழ வேண்டும் என்பதுதான். மற்றவர்களின் அதிகாரமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியற் சூழலில் தம்மைத் தாமே ஆட்சி புரிந்து கௌரவமாக வாழ்வது என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசையாகும். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அத்திவாரத்திலிருந்துதான் ஒரு நியாயபூர்வமான நிரந்தரமான தீர்வைக் கட்டி எழுப்புவது சாத்தியமானது' எனவும் தெரிவித்திருக்கின்றார்.

இந்தவகையில் தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையானது இனப்பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும், சமாதான முயற்சிக்கான ஒரு நேர்த்தியான வழி முறையினையும் முன்வைப்பதாகவும் உள்ளது. ஆனால் இதனைச் சிறீலங்கா அரசு எந்தளவிற்கு புரிந்துகொள்ளப் போகின்றது? ஒத்துழைக்கப்போகின்றது? என்பதே இன்றுள்ள முக்கிய கேள்வி. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஓயாத அலைகளில்

# ஓய்ந்த ஒரு சுடர்

பெரும் புயலோடு அலையெழுந்து பெரும் படைத்தளங்களையெல்லாம் புரட்டிச் சென்று கொண்டிருந்த வேளையிலே, அந்தக் களத்தில் தன் வெற்றித் தடங்களைப் பதித்து நின்ற பல வேங்கைகளை வேள்வித்தீயில் ஆகுதியாக்கியிருந்தோம். அப்படியொரு பெரும் சமர்க்களத்திலேதான் மேஜர் அகிலாவை நாம் இழந்தோம். மேஜர் அகிலா... அவளது தொடர்பு எமது அணிக்கு இல்லாதுபோன நிலையில் அவள் சமராடிய அந்தப் பகுதியில் எமது அணி நுழைகிறது. அந்தக் களத்திலே பகைவனுடன் மோதியது எமது துப்பாக்கிகளும் அதில் வித்தாகியிருந்த மாவீரர்களது மனவுறுதியும்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. அதில் பெருக்கெடுத்து வந்த எதிரிப்படைக்குள் தன் அணியை வழிநடத்தி ஒவ்வொரு ரவையையும் இலக்குப்பார்த்து சிக்கனமாகப் பயன்படுத்தி, மோட்டார் சூட்டாதரவு கிடைக்க முடியாத சூழலில் பெரும் சண்டை ஒன்றை நடாத்தி முடித்திருந்தாள். விசைவில்லில் விரலை வைத்தபடி வீழ்ந்திருந்த அகிலாவின் வித்துடலும், குருதி தோய்ந்திருந்த நிலையில் சிதறி விடப்பட்டிருந்த எதிரியின் கவசத் தொப்பிகளும் அங்கே அகிலா உட்பட மாவீரராகி விட்டிருந்த வேங்கைகளின் வீரத்திற்குச் சான்றாகின.

அகிலா என்ற நாமத்திற்குத்தான் தனியாற்றல் உண்டோ என எண்ணத்தோன்றும் அளவிற்கு திறமைகள் பல பெற்ற ஒரு போராளியாகத்தான் அவளைக்கண்டோம். இயக்கத்திற்கு இணையும் முன்பே படிப்பிலே மிகத் திறமைசாலியான இவள், நாயன்மார்க்கட்டிலே தன் தடம் பதித்து, அங்குள்ள பாட-சாலையிலேயே ஆண்டு ஐந்து வரை கல்விகற்று புலமைப்பரிசில் பரீட்சையிலே தேறி வேம்படி மகளிர் கல்லூரியில் சாதாரண தரம் வரை கற்றாள். குடும்பத்தில் ஒரு மாவீரர் இருந்தபோதும், போராட்டத்தின் தேவை உணர்ந்து தன்னையும் போராட்டத்தில் இணைத்துக் கொண்டாள். அடிப்படைப் பயிற்சிமுகாம் தொடக்கம் தனது சிறந்த செயற்பாட்டின் மூலம் சிறந்த போராளியாகக் கணிக்கப்பட்டாள்.

பயிற்சி முடிந்ததும் மருத்துவப் படிப்பிற்குத் தெரிவாகி தன் படிப்பை பூர்த்திசெய்து, களமருத்துவப் போராளியாக தன் கடமையில் கண்ணாக நின்று கருமம் ஆற்றும்போதும், இராணுவ சம்பந்தமான விடயங்களை அறிவதில் கொண்டு அணிகளை ஒழுங்கமைப்பதானாலும், எந்தவொரு பொறுப்பையும் உடனடியாக ஏற்றுக்கொண்டு, அதை திறமையாகச் செய்து முடிப்பதனாலும் பலரின் பாராட்டையும் பெற்றவள்தான் அவள். கள மருத்துவத்தில் நிற்கும் போதே தனது அழகான கையெழுத்தினால் அறிக்கை சம்பந்தமான சகலதையும் எவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் பொறுமையாக ஏற்றுச் செய்வாள். அத்துடன் கலையார்வம் உள்ள இவள், அணியினரை கலை நிகழ்ச்சிக்கு ஊக்கப்படுத்துவாள். இரவு பகலாக அவர்களுடன் நின்று அவர்களது தவறுகளைத்திருத்துவாள். தனக்குக் கொடுக்கப்படும் வேலையை மட்டுமன்றி, அணிக்குத் தேவையான எந்த வேலையானாலும் பொறுப்பானாலும் ஏற்றுச் செய்துமுடித்து மற்றவர்களை திருப்திப்படுத்துவது அவளது இயல்பு.

களமருத்துவத்தில் நின்றவள் பின் மோட்டார் சூட்டு அவதானிப்பாளருக்கான படிப்புக்கு அனுப்பப்பட்டு அதிலும் தன் பணியை திறம்படச் செய்தாள். நீண்ட காலமாக அவளது சேவை களமுனைகளில் இருந்தது. தன் திறமையை, செயற்படும் ஆற்றலை, சகல துறைகளிலும் ஆர்வமுடன் வெளிக்காட்டியவள். பின்னர் அதிகாரிகள் படிப்பிற்கு அனுப்பப்பட்டாள். 'நான் இந்த மெடிசின் பாக்குடன் மட்டும் நிற்கக்கூடாது, றைபிள் தூக்கிக்கொண்டு சண்டைக்குப் போக வேண்டும்' என்ற அவளது ஆசைக்கு ஒரு உந்துசக்தியாக அதிகாரிகள் படிப்பு அமைந்தது. தான் பெற்றுக் கொண்டுள்ள இராணுவ அறிவை, இராணுவ உத்திகளைப் பயன்படுத்தி ஒருபெரிய சண்டையைச் செய்யவேண்டும், அணிகளை திறமையாக சண்டையிடச் செய்யவேண்டும் என்று எத்தனையோ எண்ணங்களையும் வளர்த்துக்கொண்டு தன் படிப்பைத் தொடர்ந்துகொண்டிருந்தாள்.

படிப்பு முடிந்து திரும்பிய உடனேயே அவளது கனவுகளுக்கு உருவம் கொடுப்பதாக ஓயாத அலைகள் மூன்று களமுனைகள் விரிந்தன. சண்டையென்றதும் எல்லாப் போராளிகளது உள்ளமும் மகிழ்ச்சியில் துள்ளும். புதிய உத்வேத்துடன் களம் புகுந்துள்ள பலரும் தங்கள் ஆர்வத்தை வெளிக்காட்டி பயிற்சிகள் செய்தனர். இந்த வேளையிலெல்லாம் பயிற்சி செய்த களைப்பையும் பாராது அணியினருடன், இச் சண்டையின் வெற்றிக்காக எம்மால் ஆற்றப்படப்போகும் பெரும் பணியைப்பற்றி தெளிவுபடுத்துவதில் முன்னின்றாள். பயிற்சியில் திட்டமிட்டபடி எந்தவித சிக்கலும் இல்லாமல் எமது அணிக்குரிய பணி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது பாடுபட்டவள். அப்பணியை சண்டையின் உயிர்நாடியென போராளிகள் மத்தியில் தெளிவுபடுத்தியிருந்தாள். எப்போதும் அன்புகலந்த கண்டிப்புடன் அதேவேளை கலகலப்பாகவும், நகைச்சுவையாகவும் பேசி சோர்ந்திருக்கும் போராளிகளை உற்சாகப்படுத்துவாள்.

ஓயாத அலைகள் மூன்று களமுனைகள் திறக்கப்படுகின்றன. அங்கே அவளது அணியின் பணி துரிதமாக ஆரம்பிக்கிறது. மறுமுனையின் அணிக்கு இடையிலே சிக்கல் ஏற்படுகின்றது. பின்னர் அது தீர்க்கப்பட்டு இரு அணிகளும் தம் முதற்



**மேஜர் அகிலா**
**(சோதியா படையணி)**
**சித்திரா அம்பிகைபாலன்**
**யாழ்.மாவட்டம்**

பணிகளை பூர்த்திசெய்து இணையப்போகும் கட்டத்தில் அதில் வெற்றியீட்டியதின் பிரதிபலிப்பாக அவளது குரல் ஓங்கியொலித்தது. மறுமுனையில் வந்த தனது லீடருக்குக் கைகொடுத்து, கட்டித்தழுவி தன் சந்தோசத்தை வெளிப்படுத்தினாள். எங்கெல்லாம் எதிரி தன் அணியுடன் மோத வந்தானோ அங்கெல்லாம் ஓடியோடிச் சென்று சண்டையிட்டு பின் நீண்டு சென்ற சமர் அரங்கினை நோக்கி அணிகளை நகர்த்தினாள்.

*அகிலா தன் கனவையெல்லாம் தன் சண்டையில் கண்டிருப்பாள். ஒவ்வொரு எதிரி வீழ்வதையும் தனது போராளிகளது இலக்குத் தவறாத சூட்டையும் நேரடியாகக் கண்டு சகபோராளிகளை உற்சாகப்படுத்திச் சண்டையிடும்போது தனது கனவு நனவாகுவதான புள்காங்கிதத்துடன் பகையைத் தொலைத்திருப்பாள்.*

களமுனையில் இவளது தொடர்புக்கருவியில் இவளின் குரலின் தெளிவையும், வேகமான செயற்பாட்டினையும் பலர் பாராட்டும்படி செய்தாள். ஒவ்வொரு நகர்விலும் எதிரிக்கு அடிகொடுத்த ஒவ்வொரு வெற்றியிலும் தன் தடங்களை ஆழமாகப் பதித்துச் சென்ற இவள், நெடுங்கேணிக் களமுனையைத் தாண்டிச்செல்லும்போது எதிரியின் பிரதேசத்தில் எமக்குத் தேவையான பால்மா, சீனி போன்ற பொருட்கள் குவிந்திருப்பதைக் காட்டி 'இதையெல்லாம் கவனமாக எடுத்து வையுங்கள். சண்டை முடிந்து வந்ததும் பிள்ளைகளுக்கு ரீ போட்டுக்கொடுக்க வேண்டும்' என்று கூறிவிட்டு நகர்ந்தாள். ஆனால்.. திரும்பி எம்மிடம் வரவில்லை. இன்று ரீ குடிக்கும்போது சகல போராளிகளும் 'அகிலாக்கா சொன்னா ரீ போட்டுக் கொடுக்க வேண்டுமென்று' என்று கூறும்போது தம் விழி மடல் நனைவதை மறுபுறம் திரும்பி மறைத்துக்கொள்கின்றனர். எமது போராளிகளது ஒவ்வொரு அசைவிலும் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டுவிட்டவள், இன்று எம்மிடம் இல்லாவிட்டாலும் தன்னுடன் வந்த போராளிகளை வைத்து ஒரு திறமையான சண்டையை நடத்திய பின்பே வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள் என்பதை அறிந்து, மேலும் ஒரு புது அனுபவத்தை அகிலா மூலம் பெற்றுள்ளதாக எம் போராளிகள் பெருமைப்படுகின்றனர்.

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் சிறிய தொகையினருடன் பெருந்தொகையான எதிரியை எதிர்கொள்கிறது அகிலாவின் அணி. மறுமுனையில் நின்ற எமது அணியினருடனும் எதிரி மோதிக்கொண்டிருந்ததினால் அவளது அணிக்கு உடனடியாக உதவிக்குச் செல்லமுடியவில்லை. தங்கள் முன்னுள்ள எதிரியின் தொகையையும், பலத்தையும் தொடர்பு மூலம் அறிவிக்கையில் 'நாங்கள் அடித்துக்கொண்டிருக்கின்றோம். நல்ல சண்டைபிடிப்போம், நீங்கள் அடுத்த பகுதியை கவனியுங்கள்' என்று கூறினாள். தன் அணியினருக்கு நம்பிக்கை ஊட்டி எதிரி தென்படும்படி ஓடிஓடி சண்டை இட்டாள். அவள் மட்டுமல்ல அவளுடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய எட்டுப்பேரின் சண்டை வேகத்தையும், ஒருமுறை காயப்பட்ட நிலையிலும் காயத்திற்குக் கட்டுப்போட்டுவிட்டு சண்டையிட்டு, மீண்டும் காயப்பட்டு இனித் தன் உடலை நெருங்கும் எதிரியும் சிதைய வேண்டுமென்பதற்காக காயப்பட்ட போராளிகள் இருவர் தம் உடலுக்குள் குண்டு வைத்து படுத்ததையும் எமக்கு கூறுவதற்கு அங்கேயே காயப்பட்ட போராளி ஒருவர் உயிருடன் இருந்தார். அகிலா தன் கனவையெல்லாம் தன் சண்டையில் கண்டிருப்பாள். ஒவ்வொரு எதிரி வீழ்வதையும் தனது போராளிகளது இலக்குத் தவறாத சூட்டையும் நேரடியாகக் கண்டு சகபோராளிகளை உற்சாகப்படுத்திச் சண்டையிடும்போது தனது கனவு நனவாகுவதான புளகாங்கிதத்துடன் பகையைத் தொலைத்திருப்பாள். தான் பற்று வைத்திருந்த துப்பாக்கியின் விசைவில்லில் விரலை வைத்தபடி வித்தாகிவிட்ட அவள் முன் சிந்திக்கிடந்த எதிரியின் குருதி அவளது இலக்குகளில் ஓரளவு நிறைவேற்றிவிட்டதை காட்டும்போது அவள் சாதிக்க நினைத்தவை ஏராளம். அவற்றை நிறைவு செய்ய அவள் இன்னும்பல வெற்றிச்சமர்களைச் சந்திக்க வேண்டியவள். இன்று அவள் இல்லையென்பது எம் நினைவுகளைச் சுடுகிறது. அவளுடன் அதே இடத்தில் தம்மை இம்மண்ணிற்காக அர்ப்பணித்திருந்த அத்தனை மாவீரர்களும் பகையை அழித்திருந்தனர். அக்களத்திற்குச் சென்றவர்கள் வீழ்ந்திருந்த வித்துடல்களையும், எதிரிக்கு ஏற்பட்ட சேதத்தின் வெளிப்பாடுகளையும் கண்டு அவர்கள் புரிந்த சண்டையின் உக்கிரத்தை அறிந்துகொண்டனர். அவள் விதையாகி வீழ்ந்த செய்தி எம் செவிகளில் இடிந்தது. அவள் போகும்போது 'ரீ' பற்றி கூறியதும், அவளது இலட்சிய வார்த்தைகளும் கோபமே அறியாத அவளது மலர்ந்த முகமும் எம் இதயங்களை கசக்கிப் பிழிகின்றது. கூடித்திரிந்த இலட்சியப் பறவைகளின் பிரிவால் எங்கள் விழி கசியும் அதேவேளை, அவர்களது இலட்சியக் கனவுகளையும் சேர்த்து நாம் சுமக்கின்றோம்.

சுதந்திரம் மனிதனது பிறப்புரிமை. அதை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக இன்று எம் மண்ணில் எத்தனையோ தியாகங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் தம் வாழ்விற்காக அல்ல சந்ததியின் வாழ்விற்காக சரித்திரமாகிக் கொண்டிருக்கின்றன. இதனால்தான் பாச உறவுகளைப் பிரிந்து, தேச நலனுக்காய் பறவைகள் சிறகு விரிக்கின்றன. இவ்வாறு வந்திணைந்த கூட்டில் மகிழ்ச்சி பொங்க தம் பணிகளைச் செய்த சகோதர உறவுகளை இழந்து எம் இதயமும், தேசத்தின் இதயமும் கண்ணீர் வடிப்பது யாருக்கேனும் தெரிகிறதா! கூடி வாழ்ந்த இல்லக் கூட்டின் உறவுகள் பெரும் குரல் எடுத்துக் கதறுகின்றன. எம் மண்ணில் மாவீரரின் சாவு சரித்திரத்தில் நிலைக்க அவர்களது இலட்சிய தாகம் எம்மை இன்னும் பற்றிக்கொள்ள எம் வழித்தடங்கள் வலிமை பெறுகின்றன. எம் உள்ளத்து உணர்வுகள் உரம்பெற அதன் மூலம் நாம் விரைவினில் விடுதலையை வென்றெடுப்போம் இது உறுதி.

**செல்வி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓயாத அலைகள் -3 உம் உறவுகளின் உணர்வுகளும்

**வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஓயாத அலைகள்-03 நடவடிக்கை நடைபெற்று ஓராண்டு பூர்த்தியாகியுள்ள நிலையில் தமிழீழ மக்களின் மகிழ்ச்சி உணர்வலைகள் எழுத்து வடிவில்.**

வன்னிக்காட்டின் மூலையில் இருந்து எழுந்த ஒரு புயல் பெரும் சூறையாகி சிறீலங்காவின் அரசியல் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் சக்தியாக விளங்கி நிற்கின்றது. ஓயாத அலைகளில் அள்ளுண்டு வெற்றுடல்களாய் கரையொதுங்குகிறது சிங்களப் பேரினவாதம். தமிழர்களின் அழியாத வரலாறாகவே எழுந்துள்ள தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களையும், ஓயாத அலைகள்-3ஐயும் வாழ்த்த, வியந்துகூற வார்த்தைகளின்றி எவரும் தடுமாறுவது இயல்பே. எனினும், முடிந்தவரை தம் உணர்வுகளுக்கு வரிவடிவம் கொடுத்தவர்கள் பலர் மனித உணர்வுகளை வார்த்தைகளில் வடிப்பது எளிதல்ல. ஆயினும் முடிந்தவரை இங்கே அந்த உணர்வலைகள் வரிவடிவம் பெறுகின்றன.

ஈழத்தமிழரின் எல்லைக்குள் புகுந்தால் சங்காரம் நிஜம் என்று சிங்களமே புரிந்துகொள் என்பதாய் நகர்கிறது தமிழ்ப் படை. அதில் ஒவ்வொரு அடி எடுத்தலிலும் அதிர்கிறது சிங்களம். தலைவனின் போர்த்திறனால் விரிகிறது போர்க்களம். முதலில் வியந்து, பின்னர் அதிர்ந்து அதிசயமோ இதுவெனத் தடுமாறி நிற்கிறது இராணுவ உலகு. வல்லரசுப் பயிற்சிகளும் வலிமையற்றுப்போனதால் வழியெங்கும் விழுகிறது தென்னிலங்கைப் படைகள்.

இது பழிதீர்க்கும் போர் அல்ல, ஈழமண் மீட்கும் போர். பிரபாகரன் என்ற கர்ம வீரனின் நாடு மீட்கும் சத்தியப்போர். எங்கள் மண்ணின் ஒவ்வொரு அங்குல நிலமும் எங்களுக்கே சொந்தம் எனக் கூறும் போர். நாயாய் அலைந்த தமிழினம் தீயாய் எழுந்ததை எதிரிக்கும் உலகுக்கும் சொல்லிவைத்த போர். தேசம் பிடிக்கவென வந்த பகைவன் உயிர்கள் தேகத்தை விட்டோட வேங்கைத் தலைவன் நடத்தும் மானப்போர் இது.

சிங்களத்தின் ஆணிவேரையே அசைத்துக் கொண்டிருக்கும் இந்த அலைகளின் வீச்சில் மூச்சுவிடமறந்து நிற்கும் பேரினவாதத் தலைமையின் ஓரினம் ஓர் நாடென்ற கனவுகள் கலைய நிமிர்கிறது தமிழீழம்.

ஓயாத அலைகள் -3 வரலாற்றுப்போரின் ஒரு சிறிய பதிவாகவே இவ் உணர்வலைகள் பதிவாகின்றன. இனி... எமது உறவுகளின் வார்த்தைகளில்....

இருபத்தியோராம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்க தமிழ் மக்கள் தம்மை ஆயத்தம் செய்யும் இவ்வேளையில் புதிய வரலாறு இங்கு படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களை சூழ்ந்த துன்பங்களினதும், துயரங்களினதும் மறைவின் தொடக்கமாக இது அமைகின்றது. விடிவையும், விடுதலையையும் தேடிப்புறப்பட்ட எமது இளைய சந்ததி வீரகாவியம் படைத்துக் கொண்டிருக்கின்றது. இருபதாம் நூற்றாண்டைப் போலன்றி இருபத்தோராம் நூற்றாண்டு தமிழ் மக்களுக்கு விடிவையும், விடுதலையையும் பெற்றுத் தரும் நூற்றாண்டாகவே அமையப்போகிறது என்னும் நம்பிக்கையை, நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வுகள் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. விடிவு என்பது முடிவாகிவிட்ட விடயம். அது எப்ப என்பதே இனி உள்ளது.

**அருட்திரு. ச. எட்மண்ட் றெஜினோல்ட் அ.ம.தி**

என்னத்தை பிள்ள சொல்லுறது? 84இல் இருந்து விடுதலைப் போராட்டங்களை கவனிக்கிறோம். ஆனால் எங்கேயும் இப்படி ஒன்று நடக்கேல்ல. ஆனால், இதுதான் எங்கட உச்சப்பயணம். இதிலேயே தமிழீழம் வரவழி பார்த்திடவேணும். அதிசயம், ஆச்சரியம் என்று எதைச்சொல்லி விளங்கப்படுத்துகிறது என்று எனக்குத்தெரியேல்ல. சுபவீரபாண்டியன் (நந்தன் ஆசிரியர் தமிழ்நாடு) சொன்னதை நான் நான் சொல்லுறதும், சொல்லுறதுக்கு வேற என்ன இருக்கு. சந்தோசம், சந்தோசம், சந்தோசம் பெருமை.

**மு.சீவரத்தினம், சந்தை மேற்பார்வையாளர், (ஓய்வுபெற்ற) கனகபுரம்.**

சொல்லில் அடக்கமுடியாத உணர்வு இது. ஒட்டுமொத்தமாகச் சொன்னால் எங்களுக்கான விடிவெள்ளி தோன்றிவிட்டது என்று சொல்லலாம், போர்க்களத்திலும் சரி சமாதானப் பேச்சுவார்த்தை என்ற தளத்திலும் சரி தாம் பலமாகக் காலூன்ற வைத்த நிகழ்வு இது. இதுவே எமது பிரச்சினைகளுக்கான தீர்வினைக்காணும் ஒரு பேச்சுவார்த்தைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பம்.

**திரு.இ.ஐயாத்துரை, அரச அதிபர், கிளிநொச்சி மாவட்டம்**

என்றைக்கோ ஒருநாள் வெல்லுவம் என்ற நம்பிக்கை எனக்குள்ள இருந்தது. தலைவரின் திறமையும் எங்கேயும் ஆக்கிரமிப்பாளருக்கு ஏற்படும் கதி சிங்களவனுக்கும் ஏற்படும் என்ற வரலாற்று நடைமுறையும் அந்த நம்பிக்கையைத் தந்தது. இந்த வெற்றி போராட்டத்தை விமர்சித்தபடி எட்டவே நின்று சில கல்வியாளர்கள் மட்டத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி நிற்கிறது. அவர்கள் தாமாகவே போர் எழுச்சி அரங்கங்களை நடத்துமளவிற்கு இந்த ஓயாத அலைகள் -3 அவர்களையும் மாற்றியுள்ளது.

நாங்கள் கட்டாயம் வெல்லுவம், எத்தனை நாட்களில் என்பது தெரியாதே ஒழிய நிச்சயம் எங்கள் எல்லைகள் வகுப்பிற்கான பேசுவார்த்தை விரைவில் வரும்.

**திரு.பத்மநாபன், அதிபர், கனகாம்பிகைக்குளம்.**

நான் சவுதி அரேபியாவில் இருந்து விடுமுறையில் வந்து பாதைத் தடைகளால் போக முடியாமல் நிற்கிறேன். இந்த வெற்றியைப் பற்றிக்கேட்டால் அதிர்ச்சி, ஆச்சரியம், கனவோ என்ற பிரமை எல்லாமே எழுகிறது. எங்களுக்கு சவுதியில் இங்கு நடக்கும் அனைத்து விடயங்களும் உடனுக்குடன் தெரியவரும். ஆமி கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து பாதைபிடித்து விடுவான் என்றுதான் நினைத்திருந்தேன். அதைவிட இம்முறை வவுனியாவிற்கு வந்த போது ஆமி இருந்த நிலையையும் அவன் பலத்தையும் பார்த்துவிட்டு கொண்டுவந்த பெறுமதியான பொருட்களைக்கூட வவுனியாவில் வைத்துவிட்டு குறிப்பிட்ட பொருட்களுடன் வந்தேன். வரும் வழியில் கனகராயன்குளம் முகாமின் பலம் மலைக்கவைத்தது. அதோடு, வழி நெடுகலும் பரவி இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை அச்சத்தைத் தந்தது. ஒரு மாதிரி அவனைத் தாண்டி எமது பகுதிக்குள் வர மூன்று சின்னப் பொடியளைக்காட்டி இவர்கள்தான் இதில் நிற்கும் போராளிகள் என்றார்கள்.

வீட்டுக்கு வந்ததும் ஆட்களுக்குக் கொடுக்க வேண்டிய பொருட்கள் மட்டும் பெட்டியில் இருந்து எடுத்துக்கொடுங்கோ. மீதிப்பொருட்கள் எதையும் எடுக்கவேண்டாம், கெதியில் வவுனியா போவம் என்றுதான் சொன்னேன். நான் பார்த்த ஆமியும் அவனின் பலமும் விரைவிலேயே வன்னி முழுவதும் அவனிடம் போய்விடும் என்ற எண்ணத்தைத்தான் தந்தது. இப்படி எண்ணத்தோட இருந்த எனக்கு இப்ப நடக்கிறதெல்லாம் அதிசயமாகத்தான் இருக்கு. அத்தனை பலத்தோட இருந்த கனகராயன்குளமே இல்லையாம். இனி என்னெண்டு ஆமிக்காரன் நிண்டு பிடிப்பான்? எனக்கு இப்ப உடனேயே சவூதி போக வேண்டும் போல இருக்கு. ஏனென்றால் இந்த அதிசயம் நடக்கேக்க நான் இஞ்ச நின்றனான் என்றதை பெருமையோட சொல்ல வேணும். அதோட நேரில் நின்று வந்தவன் என்றால் செய்தி அறிய எல்லோருமே காத்திருப்பினம்.

**சிவகரன், ஸ்கந்தபுரம்.**

கஞ்சியோடயும், ஒரு தண்ணிக்கறி சோறோடையும் நின்று சண்டை பிடிக்கிற பிள்ளைகளுக்காவது விடிவு வரவேணும் என்று வேண்டுறனான். எல்லாமே கைகூடிவிட்டது செத்துப் போற பிள்ளையளை நினைச்சா வேதனைதான். ஆனாலும் இந்தச் சந்தோசத்தை அளவிடமுடியாது. தலைவரில் நாங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கை வீண்போகவில்லை. அவரைத் தலைவராகப் பெற்றதற்கு நாங்கள் எல்லோரும் பெருமைப்படவேண்டும்.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மணலாறு என்று இடம்பெயர்ந்த எல்லா இடமக்களுக்கும் சொந்த இடத்தை பிடுச்சுத் தந்த தலைவர் பத்து வருசமா நாங்கள் விட்டுட்டு இருக்கும் காங்கேசன்துறையையும் பிடிச்சுத் தருவார் என்ற நம்பிக்கை இருக்கு. ஓயாத அலைகள் -3 முடியக்கூடாது. எங்களுக்கென்று இருக்கிற எல்லா இடத்தையும் பிடிச்சு முடிச்சாத்தான் இது நிற்கவேணும் என்று கடவுளை கையெடுக்கிறேன்.

ஆனையிறவால் நாங்கள் யாழ்ப்பாணம் போற நாள் கெதியில் வரும் பிள்ளையள். தலைவர் அதுக்கும் திட்டம் வைச்சிருப்பார்.

**திருமதி. வீ. இன்பராணி (குடும்பத்தலைவி), புதுக்குடியிருப்பு.**

நெடுங்கேணியில் இருந்து ஓடி ஒட்டுசுட்டான் வந்து அங்கிருந்து ஓடி புதுக்குடியிருப்பிற்கு வந்தம். எல்லாத்தையுமே இழந்து அவலப்பட்டு நின்றம். குடும்பத்தினர் முழுப் பொருளாதாரத்தையும் போட்டு செய்த புகையிலையை அப்பிடியே விட்டிட்டு ஓடிவந்து நிவாரண வரிசையில் காஞ்சம். இருக்க வீடில்லாமல் மழையில் நனைஞ்சம். சந்திரிகா அம்மையாரின் புண்ணியத்தில இவ்வளவையும் அனுபவிச்சம்.

புதுக்குடியிருப்பிற்கும் இந்த நிலமை வந்திடுமோ என்று பதட்டப்பட்டம். ஆனால், எல்லாமே திடீரென்று மாறிப்போச்சு. நிமிசத்தில நிம்மதியையும், சந்தோசத்தையும் தந்த தலைவருக்கும், போராளிகளுக்கும் எப்படி நன்றி சொல்லப்போறம் என்றுதான் தெரியேல்ல.

**திருமதி. வள்ளிநாயகி பிற்றர்சைமன் (குடும்பத்தலைவி) நெடுங்கேணி.**

ஒட்டுசுட்டானுக்கு ஆமிவந்ததோட பள்ளிக்கூடத்தை அப்படியே விட்டிட்டு ஓடி புதுக்குடியிருப்புக்கு வந்தனாங்கள். பிறகு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தோட இணைஞ்சு எங்கட பாடசாலையையும் நடாத்தினாங்கள். அப்ப நாங்கள் சந்தித்த கஸ்ரங்கள் ஏராளம். விளையாட மைதானம் இல்லை. எங்கட சொந்த மண்ணின் பெருமை அப்பதான் தெரிஞ்சுது. விட்டிட்டு வந்த ஊரின் வளம் புரிந்தது. மனம் நொந்து எப்பதான் எங்கட ஊருக்கு போவமோ என்று ஏங்கிக்கொண்டிருக்க, ஒட்டுசுட்டான் மீட்கப்பட்ட செய்தி கிடைத்தது. இப்ப ஒட்டுசுட்டான் மட்டும் இல்லை, மணலாறின் ஒருபகுதி உட்பட வன்னியின் பெரும் பகுதி சிங்களவன் பிடியில் இருந்து மீட்கப்பட்டுவிட்டது. இது எவ்வளவு சந்தோசம் தெரியுமா? இந்த சந்தோசத்தை எப்பிடி விளங்கப்படுத்திறது? எங்கட எதிர்காலம் ஒளிமயமா தெரியுது. தலைவரின் திட்டமிடலும், தந்திரோபாயமும் பிரமிக்கவைக்குது. ‘எக்ஸ்பிறஸ்’ பத்திரிகை எழுதினமாதிரி ‘புல்லட்’ வேகம் என்ற சொற்பதம் மிகப் பொருத்தமானது என்று நினைக்கிறன். அதோடு வேறு நாடுகள் போல தள்ளிநின்று முகம் காட்டிய திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் மோட்டார் சைக்கிளில் செல்லும் காலம் விரைவில் வரும் என்ற நம்பிக்கை வந்திருக்கு. மக்கள் படை, போராளிகள், தளபதிகளின் துணையுடன் தலைவர் இதனை நிச்சயம் சாதிப்பார்.

**திரு. பங்கையற்செல்வன் அதிபர், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்.**

இந்த வெற்றி ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். வன்னிக்களத்தில் ஓயாத அலைகள் -2 இன்பின் ஏற்பட்டிருந்த நீண்ட இடைவெளியும் தலைவரின் தந்திரோபாயங்களில் இருந்த நம்பிக்கையும் இந்த எதிர்பார்ப்பிற்கு காரணமாயிருந்தது. பகைவனுக்கு வன்னியில்தான் புதைகுழி என்று அருட்திரு ஜெகத் கஸ்பார் தந்த நம்பிக்கையும் வீண்போகவில்லை என்பதோடு, எதிரியை நாங்கள் தேடிப்போய் அழிக்கவேண்டிய தேவையே இல்லாதபடி எங்கள் ஊர்களில் தலையை நீட்டியபடி அவனே நின்றதும் ‘எங்கட மண்’ என்ற போராளிகளின் உணர்வும் மக்கள் படையின் பேரெழுச்சியும் இயக்கத்தின் அண்மைக்கால ஆயுத பலமும் தலைவருக்கு துணை சேர்த்து போராளிகளின் உயிரிழப்பை குறைத்து வளம் நிறைந்த மண்ணை மீட்டுத் தந்திருக்கு. மனது நிறைந்த சந்தோசத்தோடு இருக்கிறோம்.

மிகப்பெரும் அரசியல் மாற்றத்திற்கான போராகவும் இது விரிந்திருக்கின்றது. இந்த பெருஞ் சமருக்கான காலத்தேர்வு தலைவரின் தீர்க்கதரிசனத்தைக் காட்டுவதோடு சிங்களத்தில் பெரும் பிரளயத்தை தோற்றுவிக்கும் என்பது உண்மை.

**தாமரைச்செல்வி, எழுத்தாளர்.**

ஓயாத அலைகள் -3 விடியலுக்கான வெளிச்சத்தை காட்டிக்கொண்டு வந்திருக்கு என்று சுருக்கமாகச் சொல்லலாம். ஒரு சிறிய அல்லது பெரிய முகாம் தாக்குதலை எதிர்பார்த்திருந்தனாங்கள். ஆனால், இவ்வளவு பெரிதான ஒன்றை இவ்வளவு விரைவில் எதிர்பார்க்கவில்லை. தலைவர் தமிழீழம் என்பதை சாதிப்பார் என்ற நம்பிக்கை எனக்குள் அசைக்க முடியாமல் இருந்தது உண்மை. அது இவ்வளவு விரைவில் என்பது அதிசயம்தான்.

யாழ்ப்பாண இடப்பெயர்வோடு விடுதலைப் புலிகள் ஒழிந்தார்கள். போராட்டமே அழிந்தது என்ற எண்ணம் பரவலாக எல்லோரிடத்திலுமே காணப்பட்டது. குறிப்பாக எங்களைப் போன்றவர்களின் மட்டத்தில் நம்பிக்கையீனமே பெரிதும் இருந்தது. ஆனால், சொந்தமில்லாத இடத்தில் அகலக்கால் வைத்தல் என்பது அழிவிலேயே முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்ததால் சிங்களப் படையின் பேரழிவு எதிர்பார்த்த ஒன்றுதான்.

யாழ்ப்பாண வன்னி இடப்பெயர்வுகளால் எம் மக்கள் சந்தித்த அவலங்களை ஒரு வைத்தியர் என்ற முறையில் நேரடியாக அறிந்து கொண்டவன் நான். வறுமையும் நோயும் வாட்ட இருக்க இடமின்றி மக்கள் அலைந்தது இப்போதும் கண்முன் விரியுது. 1996இன் இறுதிப்பகுதியில் 36,000 பேருக்கு எமது வைத்தியசாலை மட்டும் சிகிச்சை அழித்திருக்கு. இந்தளவிற்கு மக்களை நோயாளிகளாக்கியது இராணுவ நடவடிக்கைகள். ஆனால் இனி அந்த நிலைமை மாறும். போராட்டத்தில் நம்பிக்கையற்று விலகி நின்று வேடிக்கை பார்த்த அனைவருமே மிக இலகுவாக போராட்டத்துடன் கலந்துகொள்வதை இப்போது மேலோட்டமாகப் பார்த்தாலே புரியும். இதுகூட ஓயாத அலைகள் -3 இன் ஒரு விளைவே.

வன்னி இன்னும் அகட்டப்படவேணும், எங்களுக்குரிமையான எமது மண் பூரணமாக எமது கைக்கு வரவேணும் அதுதான் எமது விருப்பம். எமது பலத்தை வன்னியில் குவிய வைத்து பெருவெற்றிக்கான வாய்ப்பை எமக்களித்த சூரியக்கதிர் நடவடிக்கையாளர்களுக்கும் நன்றி சொல்லத்தான் வேணும். சூரியக்கதிர் நடவடிக்கை எம்மக்களுக்கு அளித்த அவலம் பெரிதுதான். மறக்கமுடியாததுதான். எனினும் அதுவே எமக்கான புதிய தளங்களிற்கும் வித்திட்டது.

நேரம் பார்த்து கொடுக்கப்பட்ட இந்த அடியில் இருந்து நிமிர சிங்களத்திற்கு நீண்டகாலம் எடுக்கும். சந்திரிகாவின் நடிப்புக்கள் இனி எடுபடாது என்பதும் உண்மை. யாழ்ப்பாணம் தானாகவே இனி எம் கைகளில் விழும். அந்த நம்பிக்கை எனக்கிருக்கு.

ஆமியுடன்தான் எமக்கும் இனி வாழ்க்கை என்றிருந்த நிலைமையை கணப்பொழுதில் மாற்றிய தலைவரின் போர் யுக்திகள் வியக்க வைக்கின்றன. கண்ணுக்கு முன்னால் ஒளி தெரியுது அது பரவும் என்ற சந்தோசத்தில் இருக்கிறம். வேறென்ன சொல்லமுடியும்.

**திரு.எ. நேசன், வைத்தியர், அக்கராயன் வைத்தியசாலை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழு... மகாநதியாக..!

சேர் பிரியான் மார்கன்
ஆணையிட்டான்
"சுதந்திரம் விரும்பும்
ஐரிஸ் குருவிகளே!
சிறகை உதிர்த்து விட்டு
வானத்தை முத்தமிடுங்கள்..
கிழவனே யாயினும்
தடிகாவித் தெருவிற் போனால்
தோலுரியும்"
பரிதியை ஆளும்
பிரித்தானிய ஆட்சிச்
சக்கரத்தின்
படைத்தளபதி நாவசைக்க
பாவம் அயர்லாந்து
பரிதவித்தது.
"தான்பிரின்" கூட்டம்
தடியோடு சேர்த்துத்
துப்பாக்கியையும் காவும்வரை!
இது வரலாறு!

"தாடி வைக்கும் பாவிகள்
தண்டிக்கப்படுவீர்"
தெய்வத் திருத்தந்தை
மகாபீற்றர் வாய் மலர்ந்தான்.
சவரக்கடையில் திருவிழா
கத்தரிக்கோல் வாயை
மூடி மூடித் திறந்தது
கடகடவென்று சிரிக்கத்
தொடங்கியது.
"பல்லிருந்தால் அழகுக்குப் பழுது
பிடுங்குங்கள்" என்றான்
ருஸ்சியா பொக்கையானது
அவன்
செத்த பிறகுதான்
ருஸ்சியா
'பல்' தெரியச் சிரித்தது!
இதுவும் வரலாறுதான்

"வீடு பேறு
உனக்கு வேண்டுமென்றால்
கோவணங்கட்டு"
'சோமபானச் சுதியோடு'
ஆரியவேதம்
அன்று சொன்னது!
இதிகாசங்கள்
'இதுவே இன்பவாழ்வு' என்று
இசைத்தது..

தமிழா!
அப்போது தூக்கிய
'அரோகராவை'
இப்போதுதான் கொஞ்சம்
கொஞ்சமாக
இறக்குகிறாய்

அதற்குள்ளே புதுக்குரல்
காதிலே கேட்கிறதா?

"கோவணத்தோடு மட்டுமே
தமிழன்
கடலுக்குள் இறங்கலாம்"
என்று
சந்திரிகாத் தேவதையின்
சமாதானத்தீட்டலில்
பளபளக்கும் பழைய
அரிவாள்கள்
சொல்கின்றன..
ஆரிய வேதங்களும்
அடுத்து வந்த புராணங்களும்
அனுங்கி அனுங்கிச்
சொன்னதை
'அப்பே ஆண்டுவ'
அலட்சியமாகச் சொல்கிறது
தமிழா...நீ என்ன?
கோவணத்தோடா..?
அதுவும் இல்லாமலா..?
இப்போது
நீ எழவில்லையானால்
மேலாடை கூட உனக்குத்
தேவைப்படாது
ஏனென்றால்
உள்ளாடையும் உருவப்படும்!
காசி நகரத்துச்
சாதுப் பண்டாக்களின்
ஈர ஊர்வலம்
ஈழத்திலும் நிகழும்..
தமிழா. தமிழா..
இப்போது உனக்கு
வேண்டுவது
"இன எழுச்சி"
எழு...!
மகாநதியாக..!
ஏய்ப்பவர் எச்சரிப்பவர்
உன் பாய்ச்சலில்
வேரற்றுப் போக...
எழு மகாநதியாக!
பார்வை நீளும் தூரம்
பாதை நீள..
கால்களைத் தூக்கிக்
காற்றைக் கடைந்து..
'காவி' யாக்கினோர்
ஆவியை அருந்தி...
மானுட விடியல்
மந்திரம் பாடி..
எழு..!
மகாநதியாக!!

"இனஎழுச்சி"
மாத இதழ் தமிழீழம்

## மாவீரர் நாள் 2000

### நோர்வே



25.11.00 அன்று ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் 1500இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். நோர்வேயின் ஏனைய நகரங்களான Stavanger, Tronoheim, Floro, Vardo ஆகிய இடங்களிலும் மாவீரர்நாள் நிகழ்வுகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

### ஐக்கிய இராச்சியம்




2.12.2000 அன்று இலண்டன் மாநகரில் அரீனா மண்டபத்தில் நிறைந்த மக்கள் சமுத்திரத்துடன் மாவீரர் நாள் இரண்டாயிரம் நிகழ்வுகள் ஆரம்பமாயின. நிகழ்வின் சிறப்பாக விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமாகிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் சிறப்புரை இடம் பெற்றது. மற்றும் பல சிறப்பு நிகழ்வுகளுடன் மாவீரர் நாள் நிகழ்வு சிறப்புற நடந்தேறியது. இந்நிகழ்வில் சுமார் 8000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

### நெதர்லாந்து



2.12.2000 அன்று நெதர்லாந்தில் உத்ரெக் நகரில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் 1500ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். சிறப்புரையை கவிஞர் அறிவுமதி ஆற்றியிருந்தார். தமிழகத்திலிருந்து வருகை தந்த கலைமாமணி ரி.கே. கலைவாணன் அவர்களின் எழுச்சி இசை நிகழ்வும் இடம்பெற்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | ITALY<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவுஸ்திரேலிய தொலைக்காட்சியில் "புலிகளுக்குப் பின்னால்" நிகழ்ச்சிக்கு சிங்களக் கல்விமான் ஒருவரின் முனைந்திறந்த மறுப்பு

தமிழர்கள் சிறீலங்கா அரசினாலும், பேரினவாதிகளாலும் தொடர்ச்சியாக நசுக்கப்படுகின்றார்கள். இலங்கைத்தீவில் சிங்களவர்க்கு என்ன உரிமையுள்ளதோ அதே போன்று தமிழர்களுக்கும் உண்டு என ஒப்புக்கொள்ளும் விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள அறிஞர்களில் கலாநிதி பிறியன் செனிவரட்ணவும் ஒருவர். தற்சமயம் அவுஸ்திரேலியாவில் மருத்துவ வல்லுனராகவும், குவின்லாந்து பல்கலைக்கழகத்தில் சிறப்பு வருகை பேராசியராகவும் பணியாற்றுகின்ற இவர், கடந்த 4.10.2000 அன்று அவுஸ்திரேலிய விசேட ஒளிபரப்புச் சேவையானது தனது டேற்லைன் நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் நிகழ்ச்சி ஒன்றினை ஒளிபரப்பியிருந்தமை தொடர்பாக பலத்த கண்டனத்தை தமிழ் கனடியன் இணையவலயத்தினூடாக வெளியிட்டிருந்தார் அவற்றிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

4.10.2000 அன்று அவுஸ்திரேலிய விசேட ஒளிபரப்புக் கூட்டுத்தாபனமானது (SBS) விடுதலைப் புலிகள் சிறீலங்காவில் அவர்கள் நடத்தும் போரிற்கு எவ்வாறு நிதியினைப் பெறுகிறார்கள் என்பது சம்மந்தமாக புலிகளின் பின்னணி எனும் தலைப்பிலான தினவரவு (Date line) நிகழ்ச்சியினை நடத்தியுள்ளது. இந்நிகழ்ச்சி ஒரு இலட்சம் அவுஸ்திரேலியன் டொலர் செலவழித்து தயாரிக்கப்பட்டதாகும். இந்நிகழ்ச்சியானது சர்ச்சைகள் மிகுந்த கிரகாம் டேவிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர் தமது பரபரப்பூட்டும் சாகசத் தன்மையின் மூலம் பிரபலம் பெற்றிருந்தார். இவரோடு சிறீலங்காப் புலனாய்வுத் துறையால் பயிற்றுவிக்கப்பட்டு, புலம்பெயர்ந்த தமிழர்களின் அன்றாட நடவடிக்கைகளை சீர்குலைக்கவென சிறீலங்கா வெளிவிவகாரத் துறையால் அனுப்பப்பட்ட காடையர்களான றோகான் குணரட்ண மற்றும் துசிரணதுங்கா எனத் தன்னை அழைத்துக் கொள்ளும் சிறீலங்கா புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த உளவாளியும் இந்நிகழ்ச்சியில் முக்கிய பங்கேற்றனர்.

இனி இந்நிகழ்ச்சி பற்றி கலாநிதி பிறியன் செனிவரட்ணவின் கருத்துகள் வருமாறு.

நான் தமிழனுமல்ல, விடுதலைப் புலியுமல்ல, நான் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஒரு சிங்களக் குடியேறி. நான் ஒரு அரசியல்வாதியுமல்ல. 50 வருடகால இலங்கைப் பிரச்சினையைப் பார்த்து வருபவன். சிறீலங்காவின் இனப்பிரச்சினையானது இன, மத, சமூக, பொருளாதார அரசியல் காரணங்களாலும் முரண்பட்டுள்ளது. போராடும் இரு தரப்புமே போரினால் கடும் பாதிப்புக்களைச் சந்திக்கின்றனர். தொடரும் படுகொலைக்ளும், ஆயுத விநியோகங்களும் நிலைமைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளன. நான் எனது நாட்டிற்குச் செல்லமுடியாத நிலைமையை இட்டு பெரிதும் வருத்தமடைகின்றேன்.

இலங்கைத்தீவிலே இடம்பெறுகின்ற போரானது வரலாற்றுப் பின்னணிகள் நிறைந்ததாகும். இவ்விடயம் வெறுமனே சாதாரண பத்திரிகையாளராலோ, தொலைக்காட்சி செய்தியாளராலோ கையாளப்படுகின்ற உணர்வுபூர்வமான சலசலப்பு விடயமல்ல.

சிறீலங்காவில் வாழும் மக்கள் மிகவும் சிக்கலான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடவேண்டியது அவசியமாகும். அவர் ஏற்கனவே தமது தந்தையாரையும், கணவரையும் வன்முறைக்குப் பலி கொடுத்தவர். இங்கு நாம் ஈண்டு கவனிக்கத்தக்கது என்னவெனில் தந்தையாரான பண்டாரநாயக்காவையும், கணவரான விஜய குமாரதுங்காவையும் கொன்றவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல. சிங்களப் பிக்குவும், வாடகைக்கு அமர்த்தப்பட்ட சிங்களக் கொலைகாரனுமே இப்படுகொலைகளை மேற்கொண்டார்கள்.

நாங்கள் சர்வதேச சமூகத்தின் அங்கத்தவர்களாக இருப்பவர்கள். ஒருதரப்பினரைத் தாக்கும் வகையிலோ அல்லது அவமதிக்கும் வகையிலான நிகழ்ச்சிகளை நடத்துவது தவறானதாகும்.

இத் தொலைக்காட்சி நிகழ்ச்சியானது விடுதலைப் புலிகளுக்கு மாசு கற்பிக்கும் நோக்கத்துடனேயே தயாரிக்கப்பட்டதாகும். எவ்வளவு தூரம் விடுதலைப் புலிகளைப் பாதித்திருக்கும் என்பது சந்தேகமே. மாறாக இதுவரையும் புலிகளுக்கு ஆதரவாகத் திரளாத தமிழர்கள் யாவரையும் ஓரணியில் திரள வைத்துள்ளது. இந்த நிகழ்ச்சி புலிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இந்த 45 நிமிட நிகழ்ச்சியின் பின்னர் புலிகளுக்கு எதுவுமே நடந்துவிடப் போவதில்லை.

இந்நிகழ்ச்சியினால் அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நம்பகத் தன்மை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதிலிலுள்ள பாரபட்சமான நிலைமை என்னவெனில் சுகாதார அமைச்சர் கலாநிதி மைக்கல் வூட்றிஜ், பேராசிரியர் எலிஜேசர் முதலானவர்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அத்தோடு அவர்கள் மீதும் களங்கம் கற்பிக்க இந்நிகழ்ச்சியின் மூலம் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முற்பட்டுள்ளார்.

இந்த அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சி பற்றிய விடயத்திற்குச் செல்வதற்கு முன்னதாக நான் விடுதலைப் புலிகளின் தரப்பிலான வாதாடுபவனோ அல்லது அவர்களின் ஆதரவாளனோ அல்ல. ஆனால் தொடர்ச்சியாக தமிழர்களும் அவர்களது ஆள்புலம் தனியாகவும், சிங்களவர்களது ஆள்புலம் தனியாகவும் அமையும்போதே இலங்கைத் தீவு முன்னேற்றமடையும் என்பதை வலியுறுத்தி வருபவன். நான் பல்வேறு கட்டுரைகளையும், கைநூல்களையும் இதுதொடர்பில் வரைந்துள்ளேன். என்னிடம் எவ்வித மண்டையோடுகளும் அலுமாரியுள் இல்லை. என்னிடம் வேறு எந்த மறைமுக வேலைத் திட்டமும் கிடையாது.

அவுஸ்திரேலிய ஒளிப்பரப்புச் சேவையின்(Date Line) நிகழ்ச்சியானது கோயில் திருவிழாக்களிலே ஆரம்பமானது. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் டேவிஸ் குறிப்பிடுகையில் சுவாமியானது வீதிக்கு வருவது குறிப்பிட்ட தீண்டத்தகாதவர்கள் எனப்படுபவர்களுக்காகவே என்று தெரிவிக்கின்றார். நான் ஒரு தமிழ்ப் பெண்ணை திருமணஞ்செய்து கொண்டவன் என்ற வகையில் எனக்கும் தமிழர் கலாச்சாரம் ஓரளவுக்கேனும் தெரியும். இந்தக் கலாச்சாரம் எங்கு நடைபெறுகிறது. புலனாய்வுத்துறைச் செய்தியாளர் எனப்படுபவர் குறிப்படுகிறாராம். இது தெற்காசியாவில் இருந்தல்ல விம்பிள்டன், தென் லண்டனா எங்கிருந்தாலும் என்ன பரவாயில்லை. நானும் லண்டனிலேயே பட்டம் பெற்றேன். ஏறக்குறைய இருப்து வருடங்கள் அங்கு பணியாற்றியிருக்கின்றேன். லண்டனில் தீண்டத்தகாதோர் என்பவர் யார்?இது வெறுமனே புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்திற்கு சேறு பூச முற்பட்டுள்ளார் டேவிஸ்.

அடுத்த விடயத்திற்கு வருவோம், சிறீலங்காப் படைகள் தமது சொந்தக் குடிகள் மீதே பெருமளவிலான எறிகணைகளை ஏவித் தாக்குகின்றார்கள். ஆனால் இங்கு கேள்விகள் எதுவும் எழுப்பப்படுவதில்லை யார் இந்த ஆயுதங்களை விநியோகிக்கின்றார்கள். ஏன் இதனை விநியோகிக்கின்றார்கள். இறுதி நுகர்வோர் சான்றிதழிற்கு நடந்தது என்ன? கப்பல் ஆயுதங்களைக் கொண்டு வருவதற்கு இது சம்பந்தமான கேள்விகள் எதுவும் அரசு மீது எழுப்பப்படுவதில்லை.

டேவிஸ் சிறீலங்கா அரசு குறிப்பிடும் 60000ற்கும் அதிகமான உயிர்கள் குறித்து கவலைப்படுகின்றார். ஆனால் சுமார் ஒரு லட்சத்திற்கு மேலான தமிழர்கள் தொடர்ச்சியான எறிகணை மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக பதவிக்கு வரும் சிங்கள அரசாங்கங்கள் கட்டவிழ்த்துவிடும் பயங்கரவாதங்களால் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதி சிக்கித் திணறுவதைப் பற்றி டேவிஸ் ஏன் எதுவுமே குறிப்பிடவில்லை.

அடுத்த இதழில் தொடரும்.......

---

கொண்டுவந்துள்ளனரா? எனின் அதற்கு ஏகோபித்த ரீதியில் சாதகமான பதிலை அவற்றால் கொடுத்துவிட முடியாது.

அதாவது, நோர்வேயின் முன் அனுபவமாகவுள்ள பாலஸ்தீன பிரச்சினை மீண்டும் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியுள்ளது. பிரிட்டன் பெருமை பேசும் அயர்லாந்து நெருக்கடியும் இன்னும் முற்றாகத் தீர்ந்தபாடில்லை. அமெரிக்கா கால்வைத்த கொசோவோ நெருக்கடியும் அவ்வாறே உள்ளது. இதேசமயம் மேற்குலகின் ஆசீர்

**ஜெயராஜ்**

வாதத்துடன் ஐ.நா. கையாள முற்பட்ட கிழக்குத் தீமோர் பிரச்சனையும் இடைநடுவிலேயே உள்ளது.

இந்நிலையில் மேற்குலகம் பெற்றுக் கொண்ட முன் அனுபவம் எந்தளவிற்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிச் செல்வதற்கு உதவும் என்பதை தற்பொழுது தீர்மானித்துவிட முடியாது. அதிலும், பௌத்தபேரினவாதம் மேற்குலகின் செயற்பாட்டிற்கு எத்தகைய ஒத்துழைப்பை நல்கும் என்பதை இன்று மதிப்பிடமுடியாது.

ஏனெனில் பௌத்த-சிங்களப் பேரினவாதம் ஹிட்லரின் நாசிசத்திற்கோ அன்றி இஸ்ரேலின் சியோனிசத்திற்கோ எள்ளளவும் குறைந்ததல்ல. அது தமிழ் மக்கள் மீது பெரும் ஒடுக்குமுறை ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பது மட்டுமல்ல இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று தேவையற்றது எனவும், இலங்கையில் தமிழருக்கு எனத் தாயகம் எதுவும் இல்லை எனவும் வரட்டுப்பிடிவாதம் கொண்டுள்ளது.

மேற்குலகத்தவர்களைப் பொறுத்து இனப்பிரச்சினைத் தீர்விற்கு சுயநிர்ணய உரிமை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அங்கீகரிக்கப்பட்டதொன்றாகும். இதனை பிரிட்டிஷ் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்ன் அண்மையில் கொழும்பு வந்திருந்தபோது சுட்டிக்காட்டினார். தமிழரின் சுயநிர்ணய உரிமையை மேற்குலகம் அங்கீகரிக்கத் தயாராக உள்ளது என அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இது பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பெரும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது மட்டுமல்ல சிறீலங்கா அரசதரப்பினரே சுயநிர்ணய உரிமை என்பதை நிராகரித்துள்ளனர். தமிழரின் சுயநிர்ணய உரிமை என்பதை ஏற்கமுடியாது என சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். இவை இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை உருவாக்கும் மேற்குலகின் முயற்சிக்கு முன்னனுபவங்கள் எத்தனை தூரம் உதவும் என்பதை கேள்விக்குரியனவையாக ஆக்குபவையாகவே இருக்கும்.

இதற்கும் அப்பால் இப்பிராந்திய சூழல் இனப்பிரச்சினைத் தீர்விற்கு மேற்குலகத்தவரின் முயற்சிக்கு ஒத்திசைவானதாக இருக்குமென்றும் கூறிவிடுதல் முடியாது. தற்போதைய நிலையில் பிராந்திய வல்லரசான இந்தியா மேற்குலகின் முயற்சிகளுக்கு ஒத்திசைவான நிலைப்பாட்டைக் கொண்டதாக காட்டிக் கொண்டுள்ளது. ஆனால், சிறீலங்கா அரசிற்கு அண்மையில் இந்திய அரசு இராணுவ ரீதியில் வழங்கிவரும் உதவிகளும், அரசியல் பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்புகளும், இனப்பிரச்சினை விவகாரத்தில் அதன் பாத்திரம் நடுநிலைமையுடன் கூடியதாக இருக்குமா? என்ற கேள்வியைத் தவிர்க்கமுடியாது எழுப்புவதாகவே உள்ளது.

ஆகையினால், இனப்பிரச்சினை விவகாரத்தில் மேற்குலகம் நம்பும் தனது முன் அனுபவம், தன்னால் பிரயோகிக்கக்கூடிய .ஓர் அரசியல்தீர்வை அவற்றால் எட்டமுடியுமா என்பதற்குத் தற்பொழுது பதில் அளித்தல் கடினமானதே ஆகும். ஏனெனில் மேற்குலகத்தின் செயற்பாடு குறித்து பௌத்த-சிங்களப் பேரினவாதம் ஏற்கனவே தனது எதிர்பார்ப்பை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டது.

அத்தோடு, சிறீலங்கா ஆட்சியாளர்களும் அரசியல் தீர்வு ஒன்றிற்கு முற்பட்டு நிற்பதுபோல் காட்டிக்கொள்ள முனையினும், இவ்விவகாரத்தில் ஆட்சியாளர்களுக்கு இடையிலுள்ள முரண்பாடுகள் வெளிப்பட்ட வண்ணமே உள்ளது. எடுத்துக்காட்டாக, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனைகள் எதுவுமற்ற விதத்தில் பேசுவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்ற வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்புக் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கைவிரிப்புச் செய்ததைச் சுட்டிக்காட்ட முடியும். இந்நிலையில் ஒருபுறம் நேரடியானதும், மறைமுகமானதுமான நிர்ப்பந்தங்கள் மூலமும், மறுபுறம் தமது முன் அனுபவங்கள் மூலம் இனப்பிரச்சினை விவகாரத்தில் மேற்குலகத்தவர்களால் எவ்வளவு தூரம் செல்ல முடியும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கமுடியும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேரினவாதிகள் கைகோர்க்கின்றனர் சிங்கள தேசத்தின் புதிய அரசியல் சூழல்

புலிகள் இயக்கத்திற்கு இராணுவத் திட்டம், தமிழ் மக்களுக்கு அரசியல் திட்டம் என்பது அம்மையார் அரசாங்கத்தின் புகழ்பூத்த கொள்கை வகுப்பு.

பேச்சளவில் இதற்கு வெளிப்படையான விளக்கம் கொடுக்கப்பட்டாலும் நடைமுறையில் இது நயவஞ்சகமான செயற்பாட்டு வடிவத்தைக்கொண்டது.

புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒட்டுமொத்தத் தீர்வாக இராணுவத்திட்டம். அதேவேளை, அரசியல் தீர்வு என்பது தமிழ்மக்களுக்கு அல்ல, மாறாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே தீர்வுத்திட்டம் என்ற அரசியல் நாடகம். இதுவே அம்மையார் அரசாங்கத்தின் யதார்த்தமான செயற்பாடாகவிருந்து வருகிறது.



சமாதானமுயற்சிகளுக்கு எதிராகக் கூக்குரலிடும் ஜே.வி.பியின் தலைமை

இம்முறை நடந்த சிறீலங்கா பாராளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரையின்போதும், இதேபோன்ற இரட்டைத் தன்மைகொண்ட அணுகுமுறையே காணப்பட்டது.

இனப்பிரச்சனைக்கு அமைதி வழியில் அரசியல்தீர்வு என தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்துவடிவில்-பிரகடனப்படுத்திவிட்டு, போர்மூலம் இனப்பிரச்சனையைத்தீர்க்க ஆணைதருமாறு அம்மையாரின் கட்சி பகிரங்கப் பரப்புரை செய்திருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் இந்த இரட்டைத்தன்மைப் பரப்புரை பற்றி ஐலண்ட் ஆங்கிலப்பத்திரிகை (23.08.2000) கிண்டலாக ஆசிரியர் தலையங்கம் வரைந்திருந்தது.

தேர்தல் முடிவில் பொ.ஐ.முன்னணி ஒரு தொங்கு நாடாளுமன்றை அமைத்தது.

இந்த தொங்கு நாடாளுமன்ற அரசாங்கத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களின் அரசியல் ஆதிக்கம் மேன்நிலையில் இருக்கவாய்ப்புண்டு என்ற காரணத்தால் அம்மையார் அவர்கள், தனது அரசியல் எதிரிகளான ஐ.தே. கட்சியினருடன் ஒரு அரசியல் சமரசம் செய்யுமளவிற்குச் சென்றுள்ளார்.

இலங்கைத்தீவின் இன்றைய தலையாய பிரச்சனை தமிழ்-சிங்கள மக்கள் மத்தியிலான தேசிய இன முரண்பாடும் அதன் வெளிப்பாடான தீவிரப்போரும்தான்.

இந்த உண்மையை சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் தத்தமது தேர்தல் பிரகடனங்களில் ஒப்புக்கொண்டு இனப்பிரச்சனையைத் தீர்க்க அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தன.

ஆனால், செயலளவில் அரசியல் தீர்வு பற்றி இரண்டு பிரதான கட்சிகளும் எதுவித அக்கறையும் காட்டவில்லை.

போரைத்தொடரும் அரசின் திட்டத்திற்கு தமிழ்-முஸ்லிம் கட்சிகள் இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காக எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஒருவரை புதிய நாடாளுமன்றின் சபாநாயகராக நியமிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி இணங்கியது. இதன்மூலம் எதிர்க்கட்சிக்கொரு சமாதானச் சமிக்ஞையை சந்திரிகா அம்மையார் அனுப்பியுள்ளார். அதை ஐ.தே. கட்சியும் பற்றிப்பிடித்துள்ளது.

புலிகளுடன் அரசு பேச வேண்டும் தாம் அரசமைத்தால் புலிகளுடன் பேசி அரசியல்தீர்வு காணுவோம் என்றெல்லாம் மேடைகளில் முழக்கியும், பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டும் அரசியல் செய்த ஐ.தே.கட்சி இப்போது நாட்டின் எரியும் பிரச்சனையாக இனப்பிரச்சனையல்ல வேறு சிக்கல்களே இருக்கின்றன என எடுத்துக்காட்டுகின்றது.

தேர்தல் ஆணையத்தில், சிங்கள காவல்துறையில், அரச நிர்வாக இயந்திரத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதே ஐ.தே.கட்சியின் இப்போதைய நிபந்தனைகளாகும். இவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அரசாங்கத்தைக் கவிழ்க்க முயல்வோம் என அது மிரட்டி உள்ளது. இதன்மூலம் போர்தொடர்வதில் ஆட்சேபனை இல்லையென்ற செய்தியையே ஐ.தே.கட்சி அம்மையாரின் அரசாங்கத்திற்கு உணர்த்தியுள்ளது.

தமிழர்களைக் கொல்ல வேண்டும் வட கிழக்கை பறித்தெடுக்கவேண்டும் அதற்காக இறுதிவரை போரை உறுதியாக நடத்தவேண்டும் என்று பகிரங்கமாகப் பேசிவந்த சிஹல உறுமய கட்சியும் புதிய நாடாளுமன்றில் இடம்பிடித்துவிட்டது.

போரை ஆதரிக்கும் ஜே.வி.பியும் கணிசமான ஆசனங்களைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக சிம்மாசனம் ஏறியுள்ளது.

தமிழினத்திற்கெதிரான போரை இடைஞ்சலின்றித் தொடர்வதற்கு ஏதுவாக பிரதான சிங்களக் கட்சிகளை அமைப்புகளை ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவழைப்பதில் பௌத்தமதபீடம் நடுவராகவும், தூதராகவும் செயற்படுகின்றது. அதில் சில வெற்றிகளையும் பெற்றுள்ளது.



சிகல உறுமயவின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றில் திலக்கருணாரட்ண.

இந்தச் சூழலைப் பயன்படுத்தும் நோக்கில் படைக்கு ஆட்திரட்ட பௌத்த பிக்குமார் உதவவேண்டும் என்று சிங்கள இராணுவத் தளபதி விடுத்த வேண்டுகோளும் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒருசில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டிலிருந்து படைவிலக்கலைப் பற்றிச் சிந்தித்த அரசாங்கம் இப்போது ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி மேலும் நில ஆக்கிரமிப்பை நடாத்த ஆசைகொண்டுள்ளது.

பேரினவாத சக்திகள் 'போர்' என்ற பொதுவேலைத் திட்டத்தில் தமது கருத்துப்பேதங்களை மறந்து-இணையமுயலும் அரசியல் சூழல் சிங்கள இராணுவ பீடத்தையும் உற்சாகப்படுத்தியுள்ளது.

போரில் சிங்களப்படைகள் முன்னேற்றத்தைக் காட்ட முடியாவிட்டாலும் போரைத் தொடரவேண்டும் என்ற பேரினவாதச் சித்தாந்தத்தை படையினர் மீது திணித்துவிடுவதில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தீவிரமாக ஈடுபடுகின்றன.

ஆனையிறவுத் தோல்வியால் படையினர்க்கு ஏற்பட்ட பதட்டத்தைத் தணிக்கும் எண்ணத்துடன் 2400 கோடி ரூபா செலவில் புதிய ஆயுதங்களை அரசாங்கம் கொள்வனவு செய்திருந்தது. இதற்காக மேலும் 3400 கோடி ரூபாய்களைச் செலவிட அரசாங்கம் தயாராகவுள்ளது என புதிய பிரதமரும் அறிவிப்புச் செய்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற கையோடு நோர்வே சென்றிருந்த சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் நோர்வே பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் 'புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் குறைவு' என மத்தியத்துவம் செய்யவந்த நாட்டிலேயே கருத்துக் கூறியுள்ளார்.

போருக்காக சிங்கள அரசாங்கம் பெருமெடுப்பில் இராணுவ அரசியல் தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுவருகின்றது என்பது கண்கூடு.

அரசு முன்னெப்போதையும்விட எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் அந்தப் போரையும், போருக்கான அரசியலையும் நடாத்தப்போகின்றது என்பது முக்கிய விடயம்.

ஆனையிறவைக் கைப்பற்றி, புலிகள் குடாநாட்டு நிலப்பரப்பில் கால்பதித்து, படையினரை மேலும் பலாலி நோக்கி நெருக்கமுயலும் இராணுவ யாதார்த்தத்தையும் அதன் அபாயங்களையும் சிங்கள அரசு மிகத் தெளிவாகப் புரிந்துவைத்திருக்கின்றது.

இந்தக் களயதார்த்தத் தெளிவுதான் பேரினவாதிகளைக் கைகோர்க்கத் தூண்டியுள்ளது.

சிங்களத்தைப் பொறுத்தவரையில் இது அவர்களுடைய இறுதிமுயற்சி.

வெல்வது அல்லது புலிகளின் வெற்றியை ஏற்றுக் கொள்வது என்ற நிலையிலேயே சிங்கள இராணுவ பீடம் இன்றுள்ளது.

பல்குழல் மோட்டார்களை, மிக் 27 விமானங்களைத் தீவிரமான வகையில் பயன்படுத்தியும் குடாநாட்டு இராணுவச் சமநிலையில் எந்தவித மாற்றங்களையும் படையினரால் செய்யமுடிவில்லை. 'புலிகளின் வேகநகர்வை புதிய ஆயுதங்கள் கட்டுப்படுத்தியுள்ளன! அவ்வளவுதான்' என சிங்கள இராணுவ ஆய்வாளர்களே விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் பேரினவாதிகளின் இணைவும் புதியவகை ஆயுதக் கொள்வனவுகளும் சிங்கள தேசத்திற்குச் சார்பாக போரில் திருப்பு முனைகளை ஏற்படுத்தப்போவதில்லை.

மாறாக தமிழரின் தரப்பில் பாரிய விழிப்புணர்வு ஏற்பட்டு போராடுவோரின் எண்ணிக்கை அதிகளவில் அதிகரிக்குமாகவிருந்தால் தமிழினத்திற்குச் சார்பாக போரில் பிரளயங்கள் ஏற்படும். அது தமிழருக்கு விடுதலையை விரைவாகப் பெற்றுத்தரும்.

தமிழீழத்திலிருந்து
**எல்லாளன்**

ஓயாத அலைகள்-03 உம் புரண்ட் லைன் சஞ்சிகையும்

## பிரபாகரன் கால்பதிக்கும் இடம் வரலாற்றில் கால்பதிக்கும்.

1999.11.01இல் வரலாற்று முதன்மை வாய்ந்த கற்சிலைமடுவில் விடுதலைப் புலிகள் உச்சமட்ட மாநாடு ஒன்றை நடத்தினர்.
கற்சிலைமடு தனது 2ஆவது வரலாற்று நிகழ்வை அன்று சந்தித்தது. இந்த இடத்திலே நின்றுதான் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஓயாத அலைகள் மூன்றின் செயற்பாட்டுத் திட்ட வடிவத்தினை முழுமைப்படுத்தி, முடிவு செய்தார்

## வரலாறுகாணா விரைவு...

ஈழப் போராட்ட வரலாற்றில் எந்தவொரு காலத்திலும், இத்துணைப் பெரிய நிலப்பரப்பை இத்துணைச் சிறு நாட்களில், இத்துணைச் சிறிய ஆளணியுள்ள விடுதலைப் புலிகள் பிடித்துக்கொண்டமை போன்று, நடைபெற்றது கிடையாது.

புரொண்ட் லைன் 10.12.99



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்